சிவமயம்.

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்"
'எண்ணித் துணிக கருமம்'
"எவ்வ துறைவ துலக முலகத்தோ-
டவ்வ துறைவ தறிவு."

C. N. அனந்தராமைய சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராசிரியர்கள்.

தொகுதி V. } 1093 ஆவணி, திருவனந்தபுரம்: SEPTEMBER 1917. { பகுதி 7.

பொருள் அடக்கம்.

விஷயம்.		பக்கம்.
1. மாதசரிதம்	...	122
2. சந்திரகுப்தசக்கிரவர்த்தி சரித்திரம்		125
3. மாயமறைவு	...	129
4. The Date of Chilappathikaram	...	131
5. To the Lord of my soul	...	134
6. ஸ்ரீமூலந்திருநாள் ஆட்சியும் சேரமன்னர் பெருமையும்	...	134
7. கடவுளுடைய நாமங்களை மனிதர்களுக்கிடுவது ஏன்?	...	138
8. நவநீதி. உத்தரராம சரிதம்	...	139

சந்தா விவரம்.

இந்தியா, இலங்கை, இரங்கூன்	ரூ. 2
வெளிநாடுகளுக்கு	ரூ. 3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

THE "TAMILIAN"

A Monthly Anglo—Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Children

Annual Subcription Rs. 2

Strictly payable in advance.

SHORT STORIES: a speciality.

The best Medium for advertisement.

Advertisement rates per month.

Full page or 2 columns	Rs.	5—0—0
Half page or 1 column	"	3—0—0
Quarter page or ½ column	"	2—0—0

Contract rates on application.

All literary communications, books *for review* etc, should be addressed to Mr. C. N. Ananta Ramaiya Sastri M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc., to

Messrs. NAGASUBRAHMANYA RAO BROS.,

Publishers, Trivandrum.

மாத சரிதம்.

இந்நாட்டாரெல்லாம் சில மாதங்களாகப்பேராவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்த நமது ஸ்ரீமூல பூபதியின் ஷஷ்டி பூர்த்தி மஹோத்ஸவம் வெகு விமரிசையாக நடந்தேறிற்று. அப்புண்ணிய தினத்தன்று இந்நாட்டின் நானு பாகங்களிலும் நடைபெற்ற ஆகோஷங்களும் பிரார்த்தனைகளும் இம்மன்னர் பெருமானிடத்து இந்நாட்டார்க்குள்ள நிகரற்ற ராஜபக்தியை நன்கு விளக்கா நிற்கும். குடிகள் சுகத்தையே தன் சுகமாகப் பேணி சென்ற முப்பது வருஷங்களாக இந்நாட்டை நன்காண்டுவரும் இவ்வேந்தர் பெருமானிடத்து யார் தான் அன்பு கூர்ந்து பக்தி காட்டாதிருப்பர்?

குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு.

ஸ்ரீமூலபூபதி ஷஷ்டிபூர்த்தி மஹோத்ஸவ மங்களம்.

मूलभूप, मङ्गलं ! कृपाकटाक्ष, मङ्गलम् !
पालनाढ्य, मङ्गलं ! मनोहराङ्ग, मङ्गलम् !
श्रीलशील, मङ्गलं ! कुशाग्रचित्त, मङ्गलम् !
कालकालवैभवात् जयप्रभो चिरं चिरम् .

जयवञ्चीश सदय
जयरम्याकृते जय,
चिरं जयतु यमिनां
नृपाणां यजतां वरः.

C. N. A.

வாழி வாழி வஞ்சியர் பெரும !
ஆழி நாத னருட் பயனாய்
அறுபா னாண்டைத் திருநாளடைந்தனை !
சிறக்க நம்நலம் ! சிரக்கநும் ஆயுள் !
அருக்க னன்ன ஒளியும் ஆண்மையும்
இந்து வன்ன எழிலுந் தண்மையும்
வான மன்ன வரையில் வண்மையும்
பெருகப் பெற்றே அறநெறி பிறழ்வறச்
செங்கோல் செலுத்திச் செழுங்குடி ஓம்பி
நீடு வாழிய நெடுந்தகை மன்னவ !
புணரி புரள்திரு வநந்தைத் துறையில்
ஈண்டிய எக்கர் மணலினும் பலவே !

கே. ஜி. சேஷையர்.

---

1. பத்திக்கு வித்துத் தாழ்ந்துற்றுப் பற்றலே,
சத்திக்குவித்துத் தன்னுபசாந்தமே,
இத்தகைய மொழிந்ததும் மூலரே
அத்தகைப்பட வாழ்வதும் மூலரே

2. கம்பநாட்டாழ்வனென்று பிதற்றிடும்
கம்பன் நாயகன் கார்த்திகை ராமனும்
அம்புவிக் கிருகண்களே யாயினர் ;
எம்பிரான் புவிக்காவியே யாயுளன்.

3. கன்னியக் குமரிக்கீடும் வள்ளியாம்
கன்னிசேர் குமரற் கீடும் யாதரோ !
மன்னனின்னுமறு பதாண்டாண்டிட
வன்னதேவியுந் தேவனுங்காக்கவே.

C. N. A. Ramaiya Sastri.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருமகள் நிருமும் தங்கித் திகழ்ந்திடும் காரணத்தால்
அரும்பெறல் நாட தாகும் அழகிய திருவாங் கூரைப்
பெரும்புகழ் எய்தி ஆளும் பெரும ! நும் ஷஷ்டி பூர்த்தித்
திருவிழாச் சிறப்பைக் கண்டால் தேவரும் திகைத்து நிற்பார்

நும்புகழ் விரித்து ரைக்க நோக்குதல் நீல மேனி
பம்பிய பதும நாபன் குணங்களைப் பகர்வ தொக்கும்
எம்பெரு விழைவு யாதென் றியம்பிடின் எண்ணில் காலம்
உம்பெரு வாழ்வு நீடித் தோங்கிட வேண்டல் ஒன்றே.

உலகினை வருத்தும் இந்த ஒப்பிலா யுத்த காலத்
துலவிலா இன்பம் எய்த உம்பெரு நாட்டை ஆண்டு
பலபல மதத்தி னோரும் பரிவொடு வாழச் செய்யும்
கலைமிகு ராம வர்ம நரபதீ ! பெருக வாழ்க.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அறம்பொருள் இன்பம் வீடிவை அளிக்கும்
கல்வியாம் அரும்பொரு ளதனைப்
பெறும்படி சிறுவர் சிறுமியர்க் கிங்கு
பெருங்கலா சாலைகள் அமைக்கும்
திறந்தனை மூலம் ஆக்கியே திவ்ய
மூலமா மன்னரென் றுமக்குப்
பிறங்கிடும் உமது நாட்டுளோர் எல்லாம்
பெயரதை அளித்தனர் போலும்.

தேம்படு பனையும் தெங்குமா பலவும்
திசைதொறும் பெருகும் நாட்டை
வாம்பரி யானை இரதமும் வலிய
வீரரும் ஆகிய படைகள்
ஆம்பரி சமையப் பெற்றுள அரசே!
அடுத்துள நாட்டொடு நோக்கின்,
யாம்பெறும் இன்பம் அங்குளார் யாரும்
என்றுமே பெறுகிலர் என்போம்.

இத்தலக இன்பம் எமக்கருள் இறைவ!
இதுவரை எங்குமே இல்லா
நித்திய கல்யா ணத்தினை உடைய
விமல! நும் சிறப்புள ஷஷ்டி
அத்தபூர்த் தியையாம் நினைத்திடுந் தோறும்
அளவிலா நந்தமாம் கடலுள்
பத்தியோ டாழ்ந்து பரவசர் ஆகிப்
பலபடி உமைப்புகழ்ந் திடுவோம்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

மூலபூ பதியே! எங்கள் முழுமுதற் கடவுள் ஆகும்
மாலவன் அடியை நாளும் மறந்திடா திறைஞ்சும் மன்னு!
சாலவே சிறக்கும் உந்தம் சதாபிஷே கத்தைக் காண
மால்ரன் முதலாந் தேவர் மகிழ்ந்தெமக் கருளல் வேண்டும்.

அய்ய! உம் ஆட்சி ஒங்கி அழகுற அமைதல் வேண்டும்;
செய்யஉம் குலத்தில் உள்ளார் சிறப்புற வாழ்தல் வேண்டும்
பெய்யலும் குன்றி டாது பெருவளம் நிறைதல் வேண்டும்;
பொய்யிலாத் தருமந் தன்னில் ப்ரஜைகளும் பொருந்தல்
வேண்டும்.

S. ராமஸ்வாமி ஐயர்,
தமிழ்ப் பண்டிதர், கெரல்ஸ் காலேஜ்,
திருவனந்தபுரம்.

ஷஷ்டியப்தபூர்த்தி மஹோற்சவ வாழ்த்து

திருமாமகள்சேர் தோளானைத் தேவா தொழுஞ்செந்
[தாளானை
ஒருமூவுலகந்தானை யுந்திக்கமலம் பூத்தானை
அருமாமறையின் முறையேத்தியரசாள் மூலந்திருமன்
[மன்னர்
பெருமான்றனது சீர் பேசப் பெறுமேழுழிப் பெரு
[ங்காலம்.

தாயென்கோ நற்கருணை மலர் தடந்தானென்கோத
[குசுகத்தின்
வாயென்கோ மன்னீதிபொழி வானேயென்கோ வளர
[றத்தின்
சேயென்கோ நஞ்சேரகுலம் செய்மாதவத்தின்பிர
[ளென்கோ
ஆயிங்கெதனையுவமை யெடுத்தறை வேனரச மணிக்
[கம்மா

வேறு

மற்கொண்டதிண் புயத்துமா மூல ராம வர்மன் வாழ்க!
[வாழ்க!
விற்கொண்ட பிறை நுதலாரிரு தம்பிராட்டி யருமிக
[வே வாழ்க!
நற்கொண்டல் மேனியினனருளாலிங் கவதரித்த நறு
[மென்குஞ்சி
போற்கொண்ட விளங்கோவுங் கோமகளும் போலிக்
[கூழி வாழ்க! வாழ்க!!

மா, சிதம்பர குற்றாலம் பிள்ளை,
ஆளூர், இரணியல்.

நாட்டுக்கு வஞ்சி நகர்க்கநந்தை புண்ணிய நீ
ராட்டுக்குக் கன்னியமர்பதியாய்—வாட்டுப்போர்
வேலேந்து மற்புயமாவேந்தருக்கு மூலபதி
சேலேந்து நல்விழியேநேர்

வாழிய நம்மூலபதி வாழியிருராணியரும்
வாழியிளங் கோமானும் கோமகளும்—ஆழியமர்
நற்காத்த னெங்கள் பத்ம நாபனருண் மேவிகலம்
எற்களித்திங் கின்னுமூழியே,

D. அகஸ்தியலிங்கம்பிள்ளை.

உ
சேரமான் பெருமான்

ஸ்ரீமூலபூபன்
திருத் தசாங்கம்.

காப்பு.

அன்பருளம் தங்கியருள் ஆனைமுகவா! மூல
மன்புகழ்த சாங்கம் வழுத்தவே—இன்பம்
விளைக்கும் பொருளும் விரிதமிழும் வெண்பாத்
தனைக்குட் படுத்திநீ தா.

நாமம்.

இன்னிசைகள் பாடும் இளங்கிள்ளாய்! எம்மிறைவன்
மன்னுதிரு நாமம் வகுத்துரையாய்—பன்னுமவன்
மாலுக் கடிமைசெயும் மாமூல மன்னவன்செங்
கோலுக் கொரு மநுவாம் கோன். (1)

நாடு.

பாலுண்ணும் செம்பவள வாயால் பசுங்கிளியே!
ஞாலம் புகழ்வேந்தன் நாடுரையாய்—சீலமிகு
மன்னும் அந்த வளநாடு மாவஞ்சி
நன்னாடாம் பொன்னுடும் நாடு. (2)

பதி.

குஞ்சுக் கிரைதேடிக் கொண்டுசெலும் அஞ்சுகமே!
வஞ்சிக் கிறையமர்ந்து வாழ்பதியென்—கெஞ்சி
அளகா புரிசலாம் செய்யும் அநந்தை
வளமார் திருநகர மாம். (3)

மலை.

பின்னை மிளம்பேச்சுப் பேசுகிளிப் பிள்ளாய்! எம
வள்ளல் பெருமான் மலைபகராய்—எள்ளளிவா
ஏலம் கமழுமலை எய்த்தவர்க்கு மேருமலை
சாலப் பெரியமலை தான். (4)

ஆறு.

பச்சைப் பசுங்கிளியே! பாரிலெமை எந்நாளும்
அச்சமறுத் தாளுமவன் ஆறுரையாய்-மெச்சுமந்த
மன்னன் கருணையினல் வற்றுமல் ஓடாறு
பன்னலமார் கோட்டாறும் பார். (5)

கொடி.

வண்டாடும் பூஞ்சோலை வாழ்கிள்ளாய்! வஞ்சிமகிழ்
கொண்டாடும் கோவின் கொடிகூறாய்—அண்டாரை
வாட்டிக் கலியை வனமோட்டி மாவிமயக்
கோட்டேறும் வில்லே கொடி. (6)

படை.

ஆரம் அணிந்தமரும் அஞ்சுகமே! விஞ்சுபுகழ்
சேரன்கை யேந்துபடை செப்பிடுவாய்—பாரதத்துச்
சாதிமத பேதமிவை சற்றுமறி யாதநடு
நீதியவன் கைப்படையாம் நேர். (7)

பறை.

சோலைக் குகந்த சுகமே! எமையென்றும்
பாலிக்கும் அண்ணல் பறைபகராய்—ஞாலத்தக்
காவலரைப் பாடிக் களித்துப் பரிசுபெறும்
பாவலர்தம் நாவே பறை. (8)

தார்.

மாங்கனியை மோது மரகதமே! வஞ்சிநிலம்
தாங்குமவன் மார்பணியும் தார்பகராய்—ஓங்குமணம்
வீசுந் தமிழ்மாலை வெற்றிப் புதுமாலை
ஆசில் மணிமாலை யாம். (9)

குதிரை.

தேனூறு சொல்லாடு செல்வக்கிளியே! எம்
கோனேறிச் செல்லும் குதிரையெது—வானுடும்
ஈடிலா வஞ்சிக் கிறைவரும் அக்குதிரை
கேடிலா நல்லறமாம் கேள். (10)

வாழ்த்து.

ஆல்போல் தழைத்தறுகு போல் வேரூன்றி
மால்போல் உலகளித்து வாழ்கவே!—பால்போலும்
செந்தமிழைக் கேட்டுவக்கும் சேரகுலசேகரனாய்
வந்தபுகழ் மாமூல மன்.

S. Muthuswami Pillai.

சந்திரகுப்த சக்கரவர்த்தி

சரித்திரம்.

ஸ்ரீமாந் வ. வே. சுப்ரமண்ய அய்யரவர்கள்.

(110-வது பக்கத் தொடர்ச்சி)

ராஜதானியின் நிர்வாக காரியங்களைப் பார்ப்பதற்கென்று ஒரு சபை தெரிந்தெடுக்கப்படும். ஏகாதிபத்தியத்தின் மற்றப்பெரிய நகரங்களின் காரியமும் இதேமாதிரி தெரிந்தெடுக்கப்பட்ட சபையால் தான் நடைபெற்றது என்று நினைக்கவும் இடமிருக்கிறது. அந்தச்சபையில் 30 சபிகர்கள் நியமிக்கப்படுவதுநியதி. அவர்கள் ஐந்து ஐந்து பேர்களாகச் சேர்ந்த ஆறு குழுக்களாகப் பிரிக்கப் பட்டிருப்பார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் அதிகாரமும் கடமைகளும் பிரத்தியேகமாக இருந்தது. முதல் குழுவானது நகரத்திலுள்ள கைத்தொழில் சம்பந்தமான சகல விவகாரங்களையும் கவனிக்கும். தொழிலாளிகளுக்கு இன்ன கூலி கொடுக்க வேண்டியதென்று நிர்ணயிப்பதும், தொழிலாளிகள் கழிப்பணி செய்யாமல் சரியாக வேலை செய்கிறார்களாவென்றும் எஜமானர்கள் அவர்களுக்கு சரியான கூலி கொடுக்கிறார்களா என்றும் பார்த்துக் கொள்ளுவதும், அந்தக் குழுவின் வேலையாகும் என்று ஊகிக்கத்தக்கது. இரண்டாவது குழுவானது நகரத்துக்கு வரும் வேற்றூர் யாத்திரிகர்கள் காரியத்தைக் கவனிக்கும். அவரவர்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி யாத்திரிகர்களுக்கு மரியாதை செய்வதும், அவர்கள் வேற்றரசர்களின் ஒற்றராக இருந்தால் அவர்களை அவர்களுக்காக ஒற்றுத்தொழில் செய்யாதிருக்கும்படி தடுப்பதும், இறந்து போய்விட்ட பிரயாணிகளுடைய பிரேதங்களை அடக்கம் செய்து, சொத்துக்களைப் பதனப்படுத்தி, அவர்களுடைய பந்துக்களை நாடி, அவர்களிடம் அவைகளை ஒப்புவிப்பதும், அந்தக் குழுவின் காரியமாகும். ஜனன மரணக் கணக்கு வைப்பது தற்கால வழக்கம் என நாம் நினைக்கிறோம். ஆனால் நகரச் சபையின் மூன்றாவது குழுவின் பிரதான வேலை அது தான். நகரத்தின் முக்கியமான தனம். ஜனங்களே தானாகையால் நகரச் சபையின் தலைவனான நாகரிகனே தான் இந்தக் குழுவில் தலைமை வகித்தான். நகர ஜனங்கள் ஒவ்வொருவருடைய யோக க்ஷேமங்களையும் விவரமாக விசாரித்து ஒரு புத்தகத்தில் பதிந்து வைப்பதும் இவனுடைய கடமையாகும். நான்காவது கூட்டம் வியாபாரங்களையும், ஐந்தாவது கூட்டம் பெரிய கைத்தொழில்களையும் தனித்தனி கவனித்து வந்தன. ஆறாவது குழு நகரத்து ஜனங்களுக்கு வரி விதித்து வசூலித்து வந்தது.

ஏகாதிபத்தியமானது அனேக மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணமும் மகாமாத்தியன் என்று அழைக்கப்படும் ஒரு பேரதிகாரியின் கையில் ஒப்புவிக்கப் பட்டிருந்தது. முக்கியமான மர்காணங்களில் சந்திருப்தன் இளங்கோக்களையே மகாமாத்தியராக நியமித்து வந்ததாகத் தெரிகிறது. ராஜ்ஜியத்தின் எல்லைப் புறங்களில் தேர்ந்த போர் வீரர்களையே நியமித்து வந்தான். அவர்களுக்கு அந்த மகாமாத்தியர் என்ற பெயர் கொடுத்து, அவர்கள் வசம் ஒரு பெரிய சேனையையும் ஒப்புவித்துவந்தான். சத்துருக்கள் யாரேனும் நாட்டைத் தாக்கினால் பிரதான சைனியத்தைக் கொண்டு வந்து அவாகளை எதிர்த்துத் தாக்கும் வரையில் அவர்களைப் போர்கொடுத்துத்தேக்கி வைப்பது இந்த அந்த மகாமாத்தியரின் காரியமாகும்.

மகாமாத்தியர் தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட குடிகளை வருத்தாது சரிவரப் பாதுகாக்கிறார்களா என்று பார்த்துக் கொள்ளுவதற்கென்று ஏகாதிபத்தியத்தில் சில அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருந்தாகள். இவர்கள் வெளிப்படையான உத்தியோகச் சின்னங்கள் ஒன்றுமின்றிச் சென்று அந்தந்த மாகாணங்களின் அதிகார முறைமையைத் தாங்களே நேரிடக் கண்டும், குறை கூறுவோரிடம் விஷயங்களைக் கிரகித்தும், குறிப்புகள் எழுதி ராஜதானி மந்திர சபைக்கு அனுப்பி விடுவார்கள். இம்மாதிரி மேல் நாட்டக்காரர் உலாவுகிறார்கள் என்கிற ஞாபகமே கூட மகாமாத்தியர்களை நெறி பிறழாமல் குடியோம்பல் செய்யும்படி தூண்டப் போதுமான அத்தாக இருந்தது. மகாமாத்தியர்களுக்கே இவ்விதம் வைத்திருந்தபோது கீழதிகாரிகளையும் கண்காணித்து வர ஒற்றர் போன்ற அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருந்தார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

நாடோறும் நாடுக மன்னன்; வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு

என்ற செஞ்சொல்லின் கருத்து சந்திரகுப்தன் அரசியலில் சர்வ சாதாரணமாக இருந்தது.

நீதி செலுத்தும் முறைமை ராஜ்ஜியத்தில் வெகு ஏற்பாடாக அமைக்கப்பட் டிருந்தது. ஒவ்வொரு வழக்கிலும் உண்மை இன்னது என்று தெரிவதற்குச் சரியான சாதனங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோட்டத்திலும் (கோட்டம் என்பது ஜில்லா) தர்மஸ் தீயஸ்தலம் என்றும், கண்டக சோதனஸ்தலம் என்றும் இரண்டு வகையான நீதி ஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வழக்குகளின் பாகுபாடு தற்காலத்தில் வழங்குவதுபோல வியவகார வழக்கு (ஸிவில்) குற்றவழக்கு (கிரிமினல்), என்று இல்லை. மனிதர் செய்யும் தீங்குகள், தனி மனிதர்களுக்கு மாத்திரம் இடைஞ்சலான தீங்குகள் என்றும் ராஜாங்கத்துக்கு அல்லது நாட்டுப் பொதுவுக்கு இடைஞ்சலான தீங்குகள் என்றும் வகுக்கப்பட்டு, முதற்சொன்னவை தர்மஸ்தீய சபையிலும், பிற்சொன்னவை கண்டக சோதன சபையிலும் விசாரிக்கப்பட்டு வந்தன. கொலை, தீவைத்தல், முதலிய குற்றங்கள் பிற்சொல்லிய வகுப்பில் சேர்ந்தவையாகப் பாவிக்கப்பட்டன. ஜூரிகள் நியமிப்பது ஆங்கிலேயருக்குள்ளேதான் முதல் முதல் ஏற்பட்ட வழக்கம் என்ற அபிப்பிராயம் உலகத்தில் பரவியிருக்கிறது. ஆனால் இது சந்திரகுப்தன் காலத்திலேயே அநுசரணையில் இருந்தது என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. கண்டக சோதனை சபையில் நியாயாதிபதிகளாக உட்காரும் மூன்று அமாத்தியர்களோடு, அவர்களுக்கு உதவியாக பிரதேஷ்டாக்கள் என்ற பெயருடன் தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று மனிதரும் உட்காருவார்கள். இவர்கள் குற்றம் நடந்த ஸ்தலத்தைப் போய்ப் பார்த்தும், அவ்விடத்திலிருக்கும் யோக்கியர்களோடு சம்பாஷித்தும், தெரியக்கூடியவர்களை யெல்லாம் தெரிந்து கொண்டு வந்து, அவைகளைச் சாக்ஷிகளின் வாக்குமூலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, கடைசியாகத் தங்களுக்கு உண்மையென்று தோன்றும் அபிப்பிராயத்தை அமாத்தியர்களிடம் சொல்லுவார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களையும் அவைகளின் ஆதாரங்களையும் ஆராய்ந்து பார்த்து அமாத்தியர் மூவருஞ்சேர்ந்து தீர்மானம் சொல்லுவார்கள். ஆகவே, சாக்ஷிகள் மனம்போனவாறெல்லாம் நிர்ப்பயமாய் பொய் சொல்லுவதற்கு சந்திரகுப்தன் காலத்து நீதி நிர்வாக தந்திரம் கொஞ்சமேனும் இடம் கொடுக்காததாக இருந்தது. நியாயாதிபதிகள் மனச்சாக்ஷிக்கு விரோதமாகவாவது நீதிநூல்களின் விதிகளுக்கு விரோதமாகவாவது தீர்மானிப்பதை முற்றிலும் தடுப்பதற்காக இன்னொரு சுகமான விதியும் அவ்வரசியலில் இருந்தது; அதாவது, பாரபக்ஷங்காட்டியாவது, நீதிசாஸ்திர அறிவின்றியாவது தவறான தீர்மானங்கள் சொல்லும் நியாயாதிபதிகளுக்கு தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்ததே.

பஞ்சாயத்துச் சபைகளும் அந்தந்த கிராம எல்லைகளுக்குள் நடக்கும் வழக்குகளையும் குற்றங்களையும் தொன்று தொட்டு வந்த வழக்கம் போலவே விசாரித்துவந்தன.

ஜனங்களின் க்ஷேமத்தையே பெருநோக்கமாகக் கொண்ட சந்திரகுப்தன் அரசியலில் விவசாய விஷயங்களை கவனிப்பதற்கென்று ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டிருந்தது. கால்வாய்கள் வெட்டுவதும், அணைக்கட்டுகள் கட்டுவதும், நதிகளின் நீர்ப்பெருக்கை ஏரிகளில் தேக்கி வைத்துக் கொள்ளுவதும், அங்கங்கே மடைகள் வகுத்து அவைகளைக் காலாகாலங்களில் திறந்து அடைப்பதும், முதலான காரியங்கள் இந்த இலாக்காவின் வேலையாகும். பஞ்சகாலங்களில் ஜனங்களுக்குக் கைதந்து அவர்கள் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முயலுவதும் இந்த மந்திரக் குழாத்தின் கடமையாகத்தானிருத்தல் வேண்டும். ஏனெனில் கருப்புக்காலங்களில் ஜனங்களை இவ்விதம் பராமரிக்கவேண்டுமென்று அர்த்த சாஸ்திரத்தில் வெகுவிவரமாக வருணிக்கப்பட்டிருக்கிறது. சமஸ்தான பண்டாரங்களிலுள்ள தானியங்களில் ஒரு பாதியை ராஜாங்கம் செலவுசெய்து விடாமல் எப்பொழுதும் கரஸ்தமாக வைத்துக்கொண்டிருக்க வேண்டியது என்பது முதல் விதி. சுபிக்ஷகாலங்களிலாகட்டும் துர்ப்பிக்ஷகாலங்களிலாகட்டும் இந்த விதியை அதிக்கிரமிக்கக்கூடாது என்று அரசனுடைய ஆணை இருந்தது. ராஜாங்கமானது பஞ்சத்தில் கஷ்டப்படும் ஜனங்களுக்கு, துர்க்கத கர்மங்களென்று பெரிட்டு வேலைகொடுத்துக் கூலிதந்து காப்பாற்றவேண்டியது என்றும், பயிரிடுவோருக்கு அடுத்தசாகுபடிக்காக விதைதானியம் அருளவேண்டியது என்றும், அரசன் ஆணை இருந்தது. இது விஷயமாக அரசனுடைய கடமைகளைச் சொல்லும் போது, குடிகளைத் தன்னால் பஞ்சத்தினின்று மீட்கமுடியாதபோ

னால் தன் நாட்டில் சிலபாகத்தை வேற்றரசனொருவனுக்குக் கொதுவை வைத்து அவனிடமிருந்து கடன் வாங்கியாவது ஜனங்களைக் காக்கவேண்டும் என்றும், அதுவும் ஏதாவது ஓர் காரணத்தால் அசாத்தியமாய்ப் போய்விட்டால் ஜனங்களைக் கருப்பில்லாத வேறுநாடுகளுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், அர்த்தசாஸ்திரம் கூறும்.

வேலை செய்துதான் பிழைக்கவேண்டி வந்தாலும் வேலையைத் தேடிப் போய் கூலிவேலை செய்வதற்கு மனம் வராதமானிகள் எல்லாக் காலங்களிலும் அநேகர் இருப்பார்கள் அவர்களுக்குச் சந்திரகுப்தன் அரசாக்ஷியில் நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஊரிலும் ராஜாங்கமானது சமஸ்தானத்தறி என்று ஒருதறி வைத்திருந்தது. அந்தத்தறிக்கு வேண்டுமானநூல் நூற்பதற்காக ஏழை விதவைகளிடத்தும், நொண்டிமுடமான ஸ்திரீகளிடத்தும், மற்றும் வேறு காரணங்களுக்காக வெளியில்வர வெட்கப்படும் பேர்களிடத்தும் பெண்கள் மூலமாக பருத்தி கொண்டுபோய்க் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. வேலைக்காகக் கூலியும் புதியவேலைக்குப் பருத்தியும் கொடுத்துவிட்டு சமஸ்தானத்தறி வேலைக்காரிகள் நூல்களை வாங்கிக் கொண்டு வந்து விடுவார்கள். இத்தோடு, ராஜாங்கமானது அங்கவீனர்களையும் கபோதிகளையும் உழைக்கவே முடியாத பலவீனர்களையும் தானே தன் செலவில் காப்பாற்றியும் வந்தது. இங்கிலாநதில் . இந்தமாதிரிச் சட்டம் சென்ற நாலைந்து வருஷத்துக் குள்ளாகத்தான் ஏற்படுத்தப் பட்டது என்று நினைத்துப் பார்க்கும் போது, நமது நாட்டில் இத்தனை காலத்துக்கு முந்தியே அனுசரிக்கப் பெற்று வந்த நாகரீக முறைகள் விஷயத்தில பெருமை பாராட்டிக் கொள்ள நமக்கு நல்ல பாத்தியமுண்டு.

தற்காலத்தில் நமது நாட்டில் குடிகொண்டிருக்கும் சுத்தமின்மைக் கண்டு சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம் என்று ஒரு கவி கூறியுள்ளார். ஆனால் ஆரியாவர்த்தம் எக்காலத்தும் இப்படியே இருந்ததில்லை. தமிழ் நாட்டிலே பராந்தகன், குலோத்துங்கன், ராஜேந்திரன், ராஜ ராஜன் முதலிய சோழ அரசர்களைப்பற்றி நாம் எழுதும்போது தமிழ் நாட்டின் அக்காலத்து நிலைமையைப்பற்றி வருணிப்போம். அவர்கள் காலத்துக்கும் 1500வருஷங்களுக்குமுந்திய அர்த்தசாஸ்திர காலத்திலும் நாடு நகரங்கள், தெருவு சந்துக்களெல்லாம் சுத்தமாக இருக்கவேண்டியதைப் பற்றியும் விஸ்தாரமான சட்டங்கள் செய்யப்பட்டிருந்தன. நகரத்திலுள் உள்ள ராஜவீதிகளும் தெருக்களும் நன்றாகக் கூட்டப்பட்டு வந்தன. தெருவுகளில் குப்பை முதலிய அசுத்தங்களை எறிவதற்கும், ஏரி குளங்களிலாவது பகிரங்கமான இடங்களிலாவது அசுசியான காரியங்கள் செய்வதற்கும் தண்டனைகள் விதிக்கப்பட்டு வந்தன. பிரேதங்களைக் குறிப்பிட்ட வீதிகள் வழியாகத்தான் கொண்டுபோகவேண்டும். குறிப்பிட்ட ஸ்தானங்களில்தான் அடக்கம் செய்யவேண்டும். தானியங்கள், எண்ணெய்கள், நெய், வாசனைப்பண்டங்கள், ஔஷதங்கள், இவைகளில் கலப்புச் சரக்குகள் கூட்டுபவர்களுக்குக் கடினமான தண்டனைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வெளிப்படையாகக் காரணம் தெரியாத மரணங்கள் எங்கேயாவது நேர்ந்தால் பிரேதங்களை உடனே ஆசுமிருதக பரிக்ஷை ஸதலம் என்று பேர் வைக்கப்பட்ட பிரேத சோதனை ஸ்தலத்துக்கு அனுப்பிவிடவேண்டும் என்று சட்டமிருந்தது. அங்கே பிரேதத்தை நன்றாகக் கூறுசெய்து பார்த்து, சாக்ஷிகளை விசாரித்து எல்லாவற்றையும் குறித்துக் கொண்ட பிறகுதான் அடக்கமசெய்ய உத்தரவு பிறக்கும்.

ராஜாங்கத்தில் எங்கே பார்த்தாலும் தர்ம வைத்தியசாலைகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் மருந்துகளும், பச்சிலைகளும், தைலங்களும், கட்டுவதற்கு வஸ்திரங்களும் வேண்டிய அளவுக்கு இருக்கின்றனவா என்று அடிக்கடி பார்த்துக் கொள்ளவேண்டியது வைத்தியர்களுடைய பொறுப்பாக இருந்தது. நமது நாட்டில் வைத்திய சாஸ்திரம் வெகு அக்கறையுடன் வளர்க்கப்பட்டு வந்தது என்று குழந்தைகளுக்குக் கூடத் தெரியும். தங்களால் கைவிட்டு விடப்பட்ட நோயாளிகளையும் ஆரியர் சுவஸ்தம் செய்துவிடுகிறார்கள் என்று அலெக்ஸாந்தருடன் வந்த கிரேக்க வைத்தியர்கள் நமது ஆயுர் வேதத்தைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். இன்றைக்கும் நல்லபாம்புவிஷத்துக்கு நமது நாட்டு ஔஷதம்தான் சரியாகப் பலிக்கிறது.

நகரங்களில் வீடுகள் அதிக நெருக்கமாகஇருக்குமாதலால் அவைகளில் அடிக்கடி நெருப்புப் பயம் நேருவதற்கு இடமுண்டு. ஆகையால் நெருப்புப்பிடித்தால் அதை அடக்கி விடுவதற்கும் அணைக்கவும் நகரங்களில் நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் ஐந்து குடங்கள், ஒரு . தண்

னீர்த்தொட்டி, ஒரு தோண்டி, ஒரு ஏணி, ஒரு கோடரி, புகையை ஓட்டுவதற்காக முறங்கள், கயிறுகள், கயிறுகளை மாட்டுவதற்குக்கொக்கிகள், மெத்தையிலிருந்து மனிதர்களை இறக்குவதற்குத் தோலால்செய்த டோலிகள், கூடைகள் ஆகிய இந்தப்பத்து வகையான சாமான்களும் இருக்கவேண்டியது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இவைகளை வைத்துக்கொள்ளாதவர்கள் வீட்டிற்குள் சமைக்கக்கூடாது. தெருவில்தான் சமைத்துக்கொள்ளவேண்டும்.

சந்திரகுப்தன் கல்வி அபிவிருத்திக்காக ஏராளமான பணம செலவழித்தான். ஒவ்வொரு கிராமத்திலும் தொன்று தொட்டுத்திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்துவந்ததனுல் அவன் அவைகளைப்பற்றித் தனியாக ஒரு ஏற்பாடும் செய்யவில்லை என்று தெரிகிறது. ஆனல் சாணக்கியன் பயின்ற தக்ஷசீலக் கலாசாலைக்கும், விதர்ப்ப நகரத்துச் சர்வகலாசாலைக்கும், காசி நகரத்துச் சர்வகலாசாலைக்கும், ஏராளமான மானியங்கள் விடப்பட்டன. தக்ஷசீலக் கலாசாலையில் வைத்தியம், ரணசிகிச்சை, சிற்பம், சித்திரம், விக்கிரகம் வார்த்தல், அனேக விதக்கைத்தொழில்கள், முதலிய பதினெட்டு கலைகள் கற்பிக்கப்பட்டுவந்தன. விதர்ப் பநகரிலுள்ள கலாசாலைதான் பிற்காலத்தில் பெரிய ரஸாயனியும் மகாபண்டிதனுமான நாகார்ஜுனனல் மகோன்னத பதவியை அடைந்தது.

ராஜ்ஜியத்தின் ராணுவபலத்தையும் கப்பல்பலத்தையும் சந்திரகுப்தன் மிகவும் நன்ருய்க் கவனித்து வந்தான் என்று நாம் சொல்லவேண்டியதில்லை. அவனுடைய கிலப்படையின் தொகை இத்தனை என்று நாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். தரைவீரன் ஒவ்வொருவன் கையிலும் இரண்டு சூலாயுதங்களிருந்தன. காலாட்படையின் முக்கியமான ஆயுதம் வாள்தான். ஆனல் இதைத்தவிர அவர்களிடம் ஒரு வில்லும் அம்புருத்தூணியும் ஒரு ஈட்டியும இருக்கும். இவர்களைத் தவிர, வில்வில் தேர்ந்தவர்களைத் தனிப் படையாகக் கூட்டிவைத்து வில் வீரர் வகுப்பு என்று பெயரிட்டுத் தனிவகுப்புக்களும் இருந்தன. இவர்களுடைய வில் ஒரு ஆள் உயரமிருக்குமாம். வில்லின் ஒருமுனையைத் தரையிலேயே நிறுத்தி வில்லாளிகள் நின்ற நிலையிலேதான் அம்புகளை பிரயோகஞ் செய்வார்கள். போர் வீரர்களுக்கெல்லாம் ஓர் ஓர் கவசமும் கேடயமும் இருந்தன.

ராணுவகாரியங்களையும் கப்பல் படை சம்பந்தமான காரியங்களையும் பழுதறக்கவனித்துப் பார்த்துக் கொள்ளுவதற்கென்று 30 பேர் அடங்கிய ஒரு சபை பிரத்தியேகமாக இருந்தது. இந்தச் சபையும் நகர சபைகள் போலவே ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதல் குழு கப்பற்படை விவகாரங்களைக் கவனிக்கும். இரண்டாவது குழுவானது படைகளின் ஆகாராதி விஷயங்களையும் வசதிகளையும் கவனிக்கவேண்டியது பொறுப்பு. மற்ற நான்கு குழுக்களும் தனித்தனியே சதுரங்க சைனியத்தின் ஒவ்வொரு அங்கத்தைச் சேர்ந்த சகல விஷயங்களையும் கண்காணித்து வந்தன. அந்தந்தப் படைகளைச்சேர்ந்த வீரர்கள் வியாயாமங்களும் அஸ்திர சாஸ்திரப்பயிற்சியும் தினம் தினம் அப்பியசிக்கிருர்களா என்றும், ஆயுதங்களைச் சரிவர பாதுகாத்துச் சுத்தமாக வைத்துக் கொள்ளுகிருர்களா என்றும் பார்த்துக் கொள்ளுவதும், புதிய ஆட்கள் சேர்த்துப் படைகளின் தொகையைக் குறையாமலிருக்கும்படிபார்த்துக் கொள்ளுவதும், தளகர்த்த ஸ்தானத்துக்குத் தகுதியாக இருப்பவர்களைப் பரீக்ஷித்து நியமிப்பதும், இந்த குழுக்களின் கடமையாகும். தவிர சைனியத்தை இரு கூறுகப் பிரித்து, இரண்டு கூறுகளையும் ஒன்றுக்கொன்று விளையாட்டாகப் போர்செய்ய வைத்து, தளகர்த்தரின் ஸாம்பராயிக ஞாபகத்தையும் வீரர்களின் உற்சாகத்தையும் ஆற்றலையும் சந்திரகுப்தனுடைய ராஜாங்கம் வளர்த்து வந்ததாகவும் தெரியவருகிறது.

கப்பற் படைக்குழுவானது படைக் கப்பல்கள் குற்றமின்றித் தகுதியாயிருக்கின்றனவா என்றும் போர்செய்ய எப்பொழுதும் சன்னத்தமாயிருக்கின்றனவா என்றும் பார்த்துக்கொள்ளவேண்டியது முதற் கடமை. ஜிந்து, ஜீலம், முதலிய வடமேற்குக் கோடியிலுள்ள நதிகளில் தான் படைக் கப்பல்களின் பெரும்பாகம் நிறுத்தப்பட்டிருந்தன. ஏனெனில் அக்காலத்தில் ஆரியா வர்த்தத்தின் எதிரிகள் அந்த ஓரமாகத் தான் வருவது வழக்கமாக இருந்தது. ஆனல் சாதாரண வியாபாரக் கப்பல்களையும் கூட இந்தக் குழுதான் கண் காணித்து வந்தது. கப்பல்களும் படகுகளும், பெரும்பான்மை ராஜாங்கத்துக்குத் தான் சொந்தமானவையாக இருந்தன. இதனல் வியாபாரிகருக்கு அனேக சௌகரியங்களிருந்தன. ஏனெனில், கப்பலின் மராமத்தில் குற்றமிருந்ததாலாவது மீகாமரின் திறமையால் குறைவு ஏற்பட்டதாலாவது சரக்கு

களுக்கு நஷ்டம் நேர்ந்தால் ராஜாங்கமே நஷ்ட ஈடு கொடுத்து விடவேண்டியது என்று பத்ததி ஏற்பட்டிருந்தது. கப்பல்களின் தாமதத்தினாலாவது மீகாமருடைய அஜாக்கிரதையினாலாவது சாமான்கள் சிதறிப் போய்விட்டாலும் சொந்தக்காரனுக்கு ராஜாங்கம் நஷ்டம் கொடுத்துவிடும். தவிர, சரக்குகள் வேறு காரணங்களால் சேதமாகிவிட்டாலும் கப்பற் கூலி முழுவதையுமாவது அதில் ஒரு பாகத்தையாவது ஏற்றவாறு ராஜாங்கம் மன்னித்தும் வந்தது.

(தொடரும்)

மாயமறைவு.

(80-வது பக்கத் தொடர்ச்சி)

III.

ஸ்ரீநிவாஸன் சத்தம் உண்டான அறையை நோக்கி ஜாக்கிரதையுடன் சென்றான். அந்தகாரத்தில் மூழ்கிக்கிடந்த அந்தப் பாழும் அறையில் அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அசைவற்று நின்றான். உற்றுக்கேட்டான். ஒரு உருவம் உருண்டு புரண்டு தன்னையே நொந்து புலம்பிக் கொண்டிருப்பதாக அறிந்தான். பின்னும் சற்று நேரம் மௌனமாய் நின்றான். பற்பல எண்ணங்கள் அவன் மனத்திற்குடிகொண்டன. கடைசியில் தைரியத்தோடு, மெதுவாக மெழுகுவர்த்தியைக் கொளுத்தி அங்குமிங்கும் ஆவலுடன் நோக்க அறையின் மூலையில் வாலிபனொருவன் கைகால்கள் கட்டப்பட்டு ஆதரவற்ற நிலையிற் கிடப்பதைக் கண்டான். மெழுகுவர்த்தியின் மங்கிய வெளிச்சத்தில் இருவர் கண்களும் சில மாத்திரைகள் மட்டும் சந்தித்தன. ஸ்ரீநிவாஸனது உருவத்தைக் கண்டதும் வாலிபன் தனக்குப் புதிதாகத் தீங்குவரப்போகிறதோ என்றஞ்சி முன்னிலும் அதிகமாக ரோதனம் செய்ய ஆரம்பித்தான். ஆனால் ஸ்ரீநிவாஸன் கூறிய தேற்று மொழிகளைக் கேட்டு மிகுந்த தைரியம் கொண்டான். ஸ்ரீநிவாஸன் வாலிபனது அங்கங்களைக் கட்டியிருந்த கயிறுகளைத்துண்டித்தெறிந்தான். எறியவும் வாலிபன் மெல்ல எழுந்து ஸ்ரீநிவாஸன் கழுத்தைக் கட்டிக்கொண்டு "எனக்கு உயிர்ப் பிச்சை தந்த உங்களுக்கு என்ன கைம்மாறு தருவேன்? இன்னும் சற்று நேரம் வரத்தாமதித்திருப்பீர்களானால், அந்தப் பாதகர்கள் என்னை என்ன செய்திருப்பார்களோ, அறியேன்" என்று ஏக்கத்துடன் மொழிந்தான். அடுத்த நிமிஷத்தில் அவன்மனத்தை அதுவரையும்பாதித்துவந்தான ஒரு எண்ணம அதிக ஊக்கத்துடனும் எழ அவன்சிறு குழவியைப்போல் விம்மி விம்மி அழுது "ஐயா, பங்கஜமெங்கே? அவளைக் கண்டீர்களா?" என்றான்.

அதற்கு ஸ்ரீநிவாஸன் "இல்லை சுந்தரம், இல்லை (வாலிபன் சுந்தரமேயன்றி வேறல்ல) ஆனால் கண்டுபிடிப்பதற்கு வருத்தமில்லை. அதற்கே உழைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"கட்டாயம் கண்டுபிடித்து விடுவீர்களா?" என்றான் சுந்தரம்.

ஸ்ரீநிவாஸன். "இந்த விஷயத்தில் என்னையறியாமலே எனக்கு ஒரு தைரியம் இருக்கிறது. தெய்வசித்தம் எதுவோ அதுபோல் நடக்கும்——சுந்தரம்' இங்கு நின்று பேசிக்கொண்டிருப்பது ஒருக்கால் அபாயத்தை விளைவிக்கக்கூடும். பக்கத்தறையில் பாதகர்கள் தூங்குகிறார்கள். நான் உன்னை இங்கு கண்டதே மிகப்பிரயாசையான காரியம். உன்னிடத்தில் சில முக்கிய கேள்விகள் கேட்கவிரும்புகிறேன்—நாம் எதற்கும் வெளியே போவோம்," என்று சொல்ல இருவரும் வெளிப்போந்து வீட்டிற்குச் சற்றப்பால் நின்ற ஒரு மரத்தின் கீழ் வந்திருந்தார்கள்.

சுந்தரம் நாள் முழுதும் கட்டுண்டு கிடந்ததனாலும் ஆகாரமில்லாததினாலும் மிக இளைத்துப் போயிருந்தான். கொஞ்சதூரம் நடந்த வருத்தத்தினால் சோர்வு அதிகரிக்க, க்ஷீணத்தைக்காட்டும் முனக்கத்துடன் தரையிற் படுத்துக்கொண்டான். ஸ்ரீநிவாஸன் சுந்தரத்தின் மாறுபாட்டைக் கவனித்து ஆவலுடன் அவன் வதனத்தை நோக்க சுந்தரம் "தாகமும் பசியும் என்னைக்கொல்கின்றன தயவுசெய்து எனக்கு ஏதாவது தந்து காப்பாற்றினால் நடந்த வரலாற்றை உங்களுக்குத் தெரிவிக்க மாட்டுவேன்" என்றான். நேரமோ நடுநிசி. இந்தவேளையில் எங்குச்சென்று பசிக்கேதாவது வாங்குவது? ஆனால் ஸ்ரீநிவாஸன் மிகுந்த இரக்கமுடையவன்.

துயரப்படுபவர்க்கு எவ்விதமும் துணை நிற்பவன். சுந்தரத்தின் வேண்டுகோளை நிறைவேற்ற அவன் வழிதேடிக் கொண்டிருக்கையில், மகாராஜா காலேஜுக்குப் பக்கத்திலிருக்கும் போற்றி 'களப்' அவனது ஞாபகத்துக்கு வந்தது. 'களப் அடைக்க 10 10½ மணி ஆகுமே, களப் உடமஸ்தர் போற்றி தூங்கி அதிக நேரமாயிராது. அங்கு சென்றால் குளிர்ந்த பதார்த்தங்களையும் அகப்படும்' என்று நினைத்துச் சுந்தரத்தை நோக்கி "அதோ அந்தக் கடைப்பக்கம் போகலாமா, சுந்தரம்? நீ நடப்பாயா?" என்றான். சுந்தரம் தனக்கு நடக்கச் சக்தியில்லையென்று சாடை பண்ண ஸ்ரீநிவாஸன் "ஆனால், சரி, இங்கேயிரு" என்று கூறிக்கொண்டு களப்பை நோக்கி நடக்கலானான். காலேஜின் தென்கிழக்குப்புறமிருக்கும் வாயிலண்டை வந்திருப்பான். அப்பொழுது "டும்" என்று துப்பாக்கியின் உரத்த சத்தம் ஒன்று புறப்பட்டு நிசப்தமாயிருந்த காற்றுக்கு ஒரு சலனத்தைக் கொடுத்தது. ஸ்ரீநிவாஸன் தைரியசாலியானாலும் திடீரென்றுவெடிச் சத்தம் புறப்பட்டதனால் திடுக்கிட்டான். சப்தம் வடகிழக்குப் புறமிருந்து வந்ததாகத் தோற்றிற்று.

"ஒருக்கால் சுந்தரத்துக்குத் தான் ஏதாவது விபத்து நேர்ந்ததோ?"—என்று சந்தேகம் கொண்டான். "சே, அவனிருப்பதைத் தான் ஒருவரும் கண்டிருக்க முடியாதே, அவனுக்கு ஒன்றுமில்லை" என்று தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். அவன் சப்தம் வந்ததிசையை சற்று நேரம் நோக்கிக்கொண்டிருக்க ஒருவீடு தீப்பட்டு எரிவதைக் கண்ணுற்றான். "ஐயையோ மோசம்போனேன்! மோசம்போனேன்!" என்று கதறிக்கொண்டே சுந்தரம் கிடந்திருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து ஓடினான். இடத்தை அணுகி நோக்க சுந்தரம் பிணமாய்க் கிடந்தான். ஹா! பரிதாபம்! பரிபம்! அகோரமான காட்சி. பங்கஜமிருக்குமிடமறிய ஆதாரங்கள் கிடைப்பதற்கு வசதியாயிருந்த அந்தக் கட்டிடம் அந்தப் பாழுங் கட்டிடம், தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. என் செய்வான் ஸ்ரீநிவாஸன்? கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லையே. வெட்கமும், துக்கமும், கோபமும் ஒன்றுக்கொன்று அவன் மனத்திற் போட்டி செய்தன. தான் ஏமாந்து போனதைப் பற்றி வெட்கம், பங்கஜத்தின் காணாமைக்குத் துக்கம், பாதகர்களைப் பழிவாங்கக்கோபம். ஸ்ரீநிவாஸன் தன் ஜேப்பிற் கிடந்த ஒரு ஊதுகுழலை எடுத்து மூன்றுதரம் விசையாய் ஊதினான். இதற்குப் பதிலாக பாளையம் பீற்று கான்ஸ்டபில் சீட்டி அடித்தான். ஒரு நிமிஷம் கழிவதற்குள் கான்ஸ்டபிளும் ஓடிவந்தான். அவன் வந்து வீடு தீப்பட்டெரிகிறது என்று கண்டதும் "ஐயா, எனக்கு சைக்கிள் ஏறத்தெரியும், பக்கத்தில் எங்கிருந்தாவது ஒரு வண்டி வாங்கிக் கொடுங்கள், கோட்டைக்குட் போய் 5 நிமிஷத்தில் தீயணைக்கும் யந்திரத்தையும் தீயணைப்பவர்களையும் கொண்டுவந்து விடுகிறேன். அவர்களில்லாவிட்டால், தீயணைப்பது சாத்தியப்படக் கூடிய காரியமல்ல" என்றான். அதற்கு ஸ்ரீநிவாஸன் "இப்பொழுது யாரைத்தட்டி யெழுப்பி சைக்கிள் இரவல் வாங்குகிறது? வீண்காலதாமசமாகும். ஆகையால், சீசே ஓடிப்போம். மேலும் நடந்து போனால் சைக்கிளிற் போவதைப் போல் அவ்வளவு அபாயமில்லையென்றான். கான்ஸ்டபிளும் ஓடிக் கண்ணுக்கெட்டாமலானான்.

தீ கோரமாய் எரிகிறது. 'தீ! தீ!' என்ற பயங்கரமான தொனியும் எங்கனும் கேட்கத் தொடங்கிற்று. மணியோசையும் ஜனங்களை எச்சரிக்கை செய்தது. வீட்டைச்சுற்றி ஜனங்கள் கும்பல் கும்பலாய்க் கூடிவிட்டார்கள். தைரியம் வாய்ந்த சிலர் கூரைமேலேறிக் கூரையைப் பிரித்தெறிய வாரம்பித்தார்கள். சிலர் எரிகிற ஓலைமீது வாழைமட்டையால் அடித்தார்கள். வேறு சிலர் தண்ணீர்க் குடங்களை வாங்கி வாங்கி இறைத்தார்கள். இந்த உபாயங்கள் எதனாலும் தீ முற்றிலும் அணைந்ததாகவில்லை. தீயணைக்கப் புறப்பட்டவர்கள் வெப்பம் பொறுக்கமாட்டாமல் தங்கள் தங்கள் பிரயத்னங்களை நிறுத்தி விட்டார்கள். காற்றும் பலமாய் அடிக்க தீக்கனல்கள் ஆகாயத்தில் பறக்கலாயின. அடுத்த வீடுகளில் தீ எங்கு தாவிவிடப்போகின்றதோ என்று எல்லோரும் பயந்தார்கள்.

இப்படியெல்லாம் 'அம்மளி கும்மளி' யாயிருக்க வீட்டின் எதிர் பக்கத்திலிருந்து ஒருவன் அதிவேகமாய் ஓடிவருகிறான். தன் மேலாடைகளைக் கழற்றி எறிகிறான். இதோ வீட்டினுட் புகுந்து விட்டான். அப்பா, நில்! நில்! ஏன் வீணாய் உயிரைக் கொடுக்கப் போகிறாய்? எவர் அதட்டியும், எவர் கூவியும், எவர் பரிதாபப்பட்டும், அவனொன்றையும் கவனிக்காதவனாய் அக்னி ஜ்வாலைக்குள்ளே மறைந்து விட்டான். தீயணைப்பது வீண் பிரயத்னமாய்ப் போய்விட்டது.

தீ யணைக்கும் யந்திரம் வீடு எரிந்து சாம்பலாகப் போகும் தருணத்திலே வந்து சேர்ந்தது. ஆனால் எல்லோரும் கூடிநின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள், எல்லோருடைய கவனமும் தீயில் மறைந்த வாலிபன் மீதேயிருந்தது. இவ்வாலிபன் ஸ்ரீநிவாஸனே என்று நம் வாசகர்கள் அநுமானித்திருக்கக் கூடும். பங்கஜம் ஒருக்கால் வீட்டிற்குள் அகப்பட்டிருப்பாள் என்று பயந்து தன்னுயிரைக் கொடுத்தாவது அவளை இரக்ஷிக்க வெண்ணியே இந்த அரிய செய்கையைச் செய்யத் துணிந்தான். சில நிமிஷங்கள் கழிந்ததும் ஸ்ரீநிவாஸன் தீயிலிருந்தும் புகையிலிருந்தும் வெளித்தோன்றி நடையின் முன் வந்து பிரக்ஞையற்று விழுந்துவிட்டான். அருகில் நின்ற ஜனங்களில் மூவர் அவனைக் கைத்தாங்கலாய்த் தூக்கி யெடுத்துப் பக்கத்து வீட்டுக்குக் கொண்டுபோய் வேண்டிய சிகிற்சை செய்தார்கள். அவன் தேகத்தில் ஒன்றிரண்டு கொப்பளங்களிருந்தனவே யன்றி வேறு காயங்களொன்றுமில்லை. அவனும் சீக்கிரத்தில் முன்போலி திடனுடையவனானான்.

அடுத்த நாள், அதாவது பங்கஜம் காணாமற் போன இரண்டாம் நாள் காலை பத்துமணியிருக்கும், ஸ்ரீநிவாஸன் எரிந்துபோன வீட்டினுள் வந்து தன்னால் கூடிய பாகங்களிலெல்லாம் சோதனை செய்துகொண்டு வந்தான். கீழ் நோக்கிய வண்ணமாய் நடந்து, சாம்பலைக் கிளறிக் கொண்டு வர, ஒரு அறையின் சமீபம் கொஞ்சம் எரிந்த பத்திரமொன்றையும், இரண்டு நெருப்புக் குச்சிகளையும் சாம்பலுக்குள்ளிருந்து எடுத்தான். பத்திரம் வீட்டிற்குள் கிடந்தமையால், ஒருக்கால் வீட்டிற்குள்ளிருந்தே தீ வைக்கப் பட்டிருக்க வேண்டுமென்று அநுமானித்தான். சற்று முன் சொன்ன அறைக்கதவு சார்த்தப் பட்டிருந்தது. கதவைப் பலமாய்த் தள்ளியும் பிடித்தும் அது திறக்கவில்லை. ஒன்றும் பயன் படாதது கண்டு சுவர்மீது ஏறி எரிந்த தட்டுப் பலகைகளுக்கு நடுவே கிடந்த ஒரு துவாரத்தின்வழி தரையிற் குதித்தான். அவ்வறையின் தளம் இரும்புத் தகடுகளால் ஆக்கப் பட்டிருந்தது. ஸ்ரீநிவாஸன் குதித்ததும் குடத்தின் வாயில் கைகொண்டு அடித்தாற் போன்று ஒரு சத்தம் கேட்டது. ஆகவே தளத்தின் கீழ் ஓர் நிலவறை யிருக்கவேண்டுமென்று அவன் தீர்மானித்தான். இரும்புத் தகட்டின்மேற் கிடந்த சாம்பலை நீக்கிப் பார்த்தான். அறையின் ஓர் மூலையில் ஒரு சிறு கதவு இருப்பதாக ரேகைகள் இருந்தன. ஸ்ரீநிவாஸன் அந்தக் கதவைத் திறக்க தன்னாற் கூடியமட்டும் முயன்றும் பயனில்லாது போயிற்று. ஆனால், நன்றாய்க் கவனித்துக் கொண்டு வருகையில அந்தத் தகட்டில் மற்றைய ஆணிகளை விட நீளமான ஓர் ஆணியைக் கண்டான். அதைப் பிடித்து இழுத்தான். அது அசையவில்லை. அமிழ்த்தினான் ஹா! என்ன ஆச்சரியம்! தரையிலிருந்த தகடு விலகி நிலவறைக்குச் செல்லும் பாதையைக் காண்பித்தது. ஸ்ரீநிவாஸனுக்கு அளவற்ற சந்தோஷம் உண்டாயிற்று. உடைகளைச் சரியாய்க் கட்டிக்கொண்டான். நிறைந்த 'ரிவால்வர்' ஒன்றைக் கையிலேந்திக் கொண்டு தைரியத்தைக் கைவிடாமல் படிவழியே இறங்கி நிலவறைக்குட் சென்றான்.

(தொடரும்)

The Date of Chilappatikaram.

K. G. Sesha Iyer Esq., B. A., B. L., M. R. A. S.

A recent visit to Chengannoor in Middle Travancore brought vividly to my mind its hoary associations with Tamil religious literature. It is a *consecrated place* famous in ancient song and story. It is the place where Kannaki or Patni Devi attained her *apotheosis*, it is sung by both Saiva and Vaishnava Saints. It is famed for its temples, and the most famous of them at present, the temple of the Goddess Bhagavathi, is really worthy of reverent visit. The idea crossed my mind, as I stood before the shrine, whether Bhagavati worship in Travancore in general, and in Chengannoor in particular might not have some relation to the worship of Patni Devi the wife-Goddess which was instituted by Cheran Chenkuttuvan, who on hearing from the hill tribes in his territory of the ascension in Chengannur of Kannaki with her husband Kovilan to heaven, and from Kulavanikan Sattanar the miraculous story of that ideal wife, set up her image for worship in a

temple that he built in her memory at his *Capital*. The story of Kannaki is known to all readers of Tamil literature. It is told in Chilappatikaram by Ilam-ko-adigal, the brother of Chenkuttuvan, and a younger contemporary of Sattanar, with a wealth of literary charm and grace that is difficult to surpass.

When did Kannaki's apotheosis take place and when was the magical epic in which her story is enshrined written? Like so many other questions relating to South Indian literary history, this question has evoked various answers, which are mutually irreconcileable. The literary structure of Chilappatikaram shows that it is an old work, but there are those that hold that practically the earliest extant works in Tamil do not ascend higher than the middle of the 8th Century. That is the view of Dr. Rainhold Root whose article on Tamils written for the 9th edition of the Encyclopaedia Britannica has been accepted as a sufficient and accurate account of the subject for the 11th edition of that work issued by the Cambridge University Press. To Dr. Rost, Chilappatikaram and Manimekali are not of sufficient importance to deserve even a bare mention of their names anywhere in his article; and his statements about dates in Tamil literatue-not based as we know on data that are now available, for he died more than 2· years ago-may well be left out as antiquated or obsolute. That does not, however, render the solution of our problem less difficult

So far, Chilappatikaram has been assigned to three periods widely separated from one another. The late Mr. Kanagasabhai Pillai, who may be taken as representing one group of investigators, believes that the poem belongs probably to the 2nd centuary after Christ. Sriman Pandit Ragava Iyengar, of the Tamil Lexicon Committee, thinks Cheran Chenkuttuvan and therefore his brother Ilam-ko-adigal, lived in, the 5th Century A. C. and Diwan Bahadur L. D. Swamikannu Pillai assures us that the exact date of the composition of the Epic is 756 A. C. The first and the third of these dates are claimed to have been arrived at from internal evidence supplied by the poem itself, while the second has been deduced from an examination of external evidence supplied by contemporary literature. The object of this paper is to examine the merits of each of these views.

We may first consider how far Pandit Ragava Aiyangar's position can be maintained. In his monograph on Cheran Chenkttuvan, which is a work of great learning and valuable literary research, the learned Pandit concludes on the basis of certain passages in *Aga nanuru* and other works that Chenkuttuvan must have flourished in the 5th centuary A. C. One of his principal arguments is that Mamulanar, who according to him should be regarded as a contemporary of Chenkuttuvan, has referred in one of his lyrics in Agana nuru to the destruction of Pataliputra by the Ganges, an event which he thinks may be assigned to some date in the 5th centuary A. C. In the first place, the verse relied on and attributed to Mamulanar is said to be found in Aga-nanuru, which is an unpublished work; and it is not therefore, possible to say whether the learned Pandit's reading is correct. Besides the verse as quoted by him does not refer to the submersion of the city in the Ganges or its destruction by the river. It runs as follows:—

பல்புகழ்நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகுபாடலிக்குழீஇக்கங்கை
நீர்முதல் கரந்தநிதியங்கொல்லோ.

It will be difficult to contend that in these lines there is any reference to the destruction of the city of Pataliputra by floods in the Ganges. Indeed the very idea of the Ganges having overflowed and destroyed the city, and of ancient Pataliputra being under the waters of the Gan-

ges was merely General Cunningham's conjecture, and it has not been accepted by historians or archæologists. The lines obviously refer to the removal by Nanda the Rich of his vast treasure to the bed of the Ganges and other places, when he was over-thrown by Chandragupta Maurya, so that it may not fall into the hands of the conqueror. The expression

நந்தர்பாடலி குழீஇநிதியம்

கங்கைநீர்முதற்கரந்த

leaves, to my mind, no room for doubt whatever that that is the reference. We will, however, suppose for the sake of argument, that the reference is to the destruction of the ancient Patalipura by floods in the Ganges; where is the warrant or necessity for holding that the destruction should have occurred about the 5th centuary A. C.? The learned Pandit bases his inference on what he thinks has been said by Hiuen Thsang and Mr. R. C Dutt; but the reference to them is inconclusive, as neither says anything about the destruction of the city by the action of the river. Hiuen Thsang found Patalipura only a village, bereft of all importance, or magnificence; and the reason for its patent decline is not difficult to see. We learn that already in A. C. 350 Patalipura had been abandoned as a capital city. Fa Hian who visited India in the beginning of the 5th centuary A. C. says the *ruins* of Asoka's walls still looked magnificent: but the city itself was in a deserted condition, though still fairly inhabited. The process of decay that had visibly set in before Fa Hian's visit, had gone on unchecked for nearly another three centuries before Hiuen Thsang came, and naturally therefore, even without destructive agency of the river, Patalipura would have dwindled into insignificance when Hiuen Thsang visited it. If there had been a flood submerging and destroying the royal city, it was possibly before Fa Hian's visit, and as he does not make any reference to such an event, it might have occured long before his time. In the ancient Pali work entitled Mahaparinibhanasutta, which possibly dates back to about B. C. 375, we read that Buddha, seeing the Saisunagas laying out the city of Patalipura remarked to his companion, the venerable Ananda:—"In as much, O Ananda! as it is an honourable place as well as a resort of merchants this shall become a leading city; but, O Ananda! one of three dangers will befall Pataliputta, either from fire or from water or from dissension." It is common knowledge that the Puranas indulge in *expost facts* prophecies; and it might well be therefore that even before the date of the Satta, Patalipura had been in the days of the Nanda Kings ravaged by flood. The learned Pandit next tells us that Samudraguptha invaded Kerala and that Mamular has made specific mention of a battle fought by Samudra Gupta against a Pandian chieftain Pazhyan Maran, who was subsequently overthrown by Chenkuttuvan. I am afraid this statement is unwarranted. The former of these assertions, namely that Samudra Gupta invaded Kerala, is based on a misreading by Dr. Fleet of the wellknown inscription of the Samudra Gupta's exploits upon an Asoka Pillar now at Allahabad. Dr. Keilhorn pointed out the mistake, and Dr. Fleet himself has since admitted it. It may now be taken as established beyond dispute that *Kuralaka Mantaraja* in that inscription refers to King Mantaraja whose territory lay on the banks of the Kolleru (Kolair) lake, on the east coast, and absolutely nothing whatever to do with *Mantharam Cheral* (மாந்தரஞ் சேரல்) as Pandit Ragava Aiyangar wrongly believes. Indeed the ambitious Gupta Emperor did not proceed south of Kanchi in his triumphant march into the Dekhan, but made a detour to the north west from Kanchi, and passing through Deva Rashtra (Maharashtra) and Erandapalla (Kandesh) returned to his territory.

He did not come in contract with any Chera or Pandyan Prince or chieftain; and in the verses from *Aga nanuru* relied on by Sriman Ragava Aiyangar, there is no mention, either by name or by necessary implication of any Gupta conqueror of South India. The verses expressly refer to Mauriar (மோரியர்), and that expression cannot indicate Samudragupta who came several Centuries after the Mauryan dynasty. We know from history that Bindusara Maurya, the successor of Chandragupta Maurya conquered and brought under his sway a considerable portion of Dakshinapatha or the Dekhan, and that he entrusted that territory to his son Asoka as viceroy; and may not Mamular, even accepting the reading given by Pandit Ragava Aiyangar of the passage from Aga nanuru to be correct, be regarded as refering to one of Bindusara's expeditions? I say, even accepting the reading to be correct, for in the passage from *Pura Nanuru* the expression that is read by Pandit Ragava Aiyangar as மோரியர் appears in Mahamahopadhaya Pandit V. Swaminatha Aiyar's edition as ஓரியர், which is also the reading adopted by the ancient Scholiast in his commentary on *Purananuru*.

To the Lord of my Soul

O Lord of my soul, having seen Thee once in a dream I loved Thee and having loved Thee I could desire naught else.

The vision of Thy countenance has kept me true to Thy path for ever Fair sights and sounds lie strewn around me, but they have not power to draw my gaze from Thee. They have lost their charm for me whom Thou hast chosen for Thy bride.

I sit in the market place and would fain purchase some gift for my Lord, but I find nothing worthy of being presented to Thee.

I lay the flower of my life before Thee to be crushed by Thy feet into fragrance that shall fill the world.

The passers-by mock me and say I am mad to have chosen such an evasive bridegroom. But could I, after seeing Thee, choose another?

Let the seed of my soul wither in this barren land. It will bloom in another world for Thy worship.

I do not seek to be loved in return. Only let me love Thee through all my lives;

K. G. Sankara Iyer, B. A.B. L.

Note:—This by the way our puranas depict by Parvati's wish. (C. N. A.)

ஸ்ரீமூலந் திருநாள் ஆட்சியும் சேரமன்னர் பெருமையும்.

By V. Srinivasa Sastri Smriti-Visarada.

இயற்கையாகவே ராஜபக்தியுள்ள நாம் நேற்று வெகு விமர்சையாய் நடத்தப் பட்ட மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களின் ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்தை கண்ணாரக் கண்டு பேரானந்தக் கடலில் முழுகும்படி கருணை கூர்ந்தனுக்கிரஹித்த ஸர்வேச்வரனை முதலில வணங்க வேண்டும். முடிவேந்தரிடம் நமக்குள்ள விசேஷ பக்தியால் மனதில் பெருகிக் கொண்டிருக்கும் மகிழ்ச்சியைக் காண்பிக்க நாமின்றைய தினம் இங்கே கூடியிருப்பதுபோல் இந்நாட்டிலுள்ள சுமார் முப்பத்தைந்து லக்ஷம் பிரஜைகளும் ஆங்காங்கு ஜாதிமத வேற்றுமையின்றி, தமக்குண்டான ஸந்தோஷத்தைப் பலவிதத்திலும் காண்பிப்பார்கள். சேரநாடாகிய மலைநாட்டில் வஸிக்கும் மஹாஜனங்களுக்கு பிரஜைகளிடம் பக்ஷபாதத்துடன் செங்கோல் செலுத்திவரும் மன்னரின் பிறந்த நாளை விசேஷ திருநாளாகக் கொண்டாடுவது தொன்றுதொட்டு வழங்கிவரும் ஓர் அநுஷ்டானமாயுள்ளது. ஆண்டுதோறும் அரசர்களின் பிறந்த நாளையும் ஓர் புண்ணிய தினமாகக் கருதி நகரத்தார் எல்லோரும் அன்று மிகுந்த உற்சாகத்துடன் மகிழ்ந்து விளையாடி காலம்கழிப்பதென்பது பண்டைத் தமிழ்

நூல்களில் வெளிப்படையான விஷயம். இந்நாளைப் பெருநாளென்றும் பெருமங்கலமென்றும் அழைப்பார்கள். பண்டிகைநாள் அல்லது உத்ஸவநாள் என்பது இதன் பொருள். மணிமேகலை வஞ்சிநகரத்திற்குள் புகுந்தபொழுது சேரராஜனான செங்குட்டுவனின் பிறந்தநாள் வெகு விமர்சையுடன் உற்சவநாளாகக் கொண்டாடப் பட்டதென்று மணிமேகலையில் கூறியுளது. இவ்வரசன் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள் ஜீவித்திருந்தவன். அக்காலங்களிலேயே இவ்வழக்கம் நடப்பிலிருந்ததென்று முன கூறியதிலிருந்து வெளியாகிறது. தவிரவும் தேவாலயங்களில் ஏழுநாளல்லது பத்து நாள் நீடிக்கும் திருவிழாக்களை ராஜாக்களின் பிறந்த நாளன்று ஆறாட்டு நேரும்படி நடத்துவதும் ஓர் பழைய ஸம்பிரதாயம். இம்மாதிரியாக ஸ்ரீராஜராஜனென்னும் சோழ சக்ரவர்த்தி தென் திருவிதாங்கூரில் திருநந்திக்கரையிலுள்ள தெய்வத்திற்குத்தன் பிறந்தநாளன்று ஆறாட்டு வரும்படியாக ஏழுநாள் உற்சவத்தை ஏற்படுத்தியிருந்தான். முடிமன்னரின் ஜன்மநக்ஷத்திரத்தை இவ்விதம் பலவாறாகக் கொண்டாடுவது நமது பூர்வீக வழக்கம். ஜனஸமுதாயத்தில ராகத்வேஷாதிகள் மிகுந்து 'பலவான் கார்யம் ஜயம்' என்று அநீதியாய் மாத்ஸ்யநியாயம் பரவாமல் தடுப்பதற்காக அஷ்டதிக்பாலர்களின் அம்சங்களால் ஸர்வேசுவரன் அரசனை சிருஷ்டித்திருப்பதாக நமது சாஸ்திரங்களின் கொள்கை. அரசன் இந்திரனைப் போல் தனது பாகத்தைப் பெற்றுச் சரிவரப் . பரிபாலனம் நடத்தி வருவதாலும், காற்று தனது பணத்தை பிரேரிப்பது போல், அரசனும் நற்செயல் தீச்செயல்களை நடப்பிப்பதாலும், சூரியன் ஒளியைப் பரப்பி இருளைப் போக்குவது போல் தர்மத்தைத் தழைப்பித்து அதர்மத்தை அழிப்பதாலும் யமனைப்போல் கொடியவரை சிட்சிப்பதாலும், அக்கினியைப்போல் பரிசுத்தமாயிருந்து ரக்ஷார்த்தமாக பாகத்தைப் பெறுவதாலும, வருணன் நீரால் எல்லாவற்றையும் போஷிப்பதுபோல் பணத்தால் எல்லோரையும் காப்பாற்றுவதாலும், சந்திரன் கிரணங்களால ஜனங்கட்கு மகிழ்ச்சியை விளைவிப்பதுபோல அரசனும் தனது நற்குணம் நன்னடையிவற்றால் எல்லோரையும் ஆஹ்லாதப் படுத்துவதாலும் அரசியல் செலுத்தும் வேந்தரிடம் அஷ்டதிக்பாலர்களின் அம்சங்களும் பொருத்தமாயுள்ளதென்று நம் பழைய நூல்கள் கூறுகின்றன. இக்கொள்கையைப் பின்பற்றியே தான் ஸ்மிருதிகர்த்தாவான மனுவும்:—

"बालोऽपि नावमन्तव्यो मनुष्य इति भूमिपः ।
महती देवता ह्येषा नररूपेण तिष्ठति ॥"

என்றெழுதியிருக்கிறார். பண்டைக் காலங்களில் ஹிந்துராஜாக்கள் பிரஜாயோக க்ஷேமங்களிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து செங்கோலை நீதியாய் நடத்தி

"स्वभागभृत्या दासत्वे प्रजानां च नृपः कृतः ।
ब्रह्मणा स्वामिरूपस्तु पालनार्थं हि सर्वदा ॥"

என்றபடி தமது நியோகத்திற்குச் சம்பளமாக கப்பத்தைப் பெற்று பிரஜைகளின் தாஸர்களாய் அரசாட்சி நடத்திவந்ததுடன், அரசியலை சுதந்திரமாய்ச் செலுத்த அதிகாரம் தமக்கிருந்தாலுங்கூட ஆலோசனை ஸபையில் மற்றவரின் கொள்கையோடு தனது நோக்கத்தையும் ஆராய்ந்து பஹுஸம்மதமான விஷயங்களையே நடத்திவந்ததால் பிரஜைகளின் க்ஷேமத்தில் எவ்விதக் குறைவும் உண்டாகவில்லை. ஆதலின் அக்காலங்களில் ஜனங்கள் சற்றும் ராஜபக்தி குறையாமல் மன்னர்களிடம் தெய்வவிச்வாசத்தை வஹித்து வந்திருப்பது முற்றிலும் ஸம்பாவிதம். அனதுபற்றியே தான் ஹிந்துமன்னர்கள் அரசாண்டு வந்த நாட்களில் ஜனங்களுக்குப் பொதுவாய் சுவாதந்திரியத்தில் விருப்பமோ ராஜாக்களிடம் பக்திக்குறைவோ ஜனித்ததாக சரித்திரங்கள் வாயிலாகத் தெரியவரவில்லை. நம்மையரசாளும் அரசர்களிடம் தெய்வ விசுவாசத்துடன் அன்னாரின் திருநாளை ஓர் பெருநாளாகக் கொண்டாடும் ஹிந்துக்களான நாம் இம்மாதிரி வெகுகாலத்திற்கிடையில் ஸ்ரீமூல மஹாராஜாவின ஷஷ்டியப்தபூர்த்தி தினத்தை மிகச்சிறப்பான மஹோத்ஸவமாகக் கருதி ஆனந்தப்படுவதில் யாது தடை? நம் மன்னர்பிரானுக்கு ஹிந்துமதத்திலுள்ள பூர்ணவிசுவாசமும், ஸர்வேச்வரனான பத்மநாபனிடமுள்ள விசேஷபக்தியும், ஜனோபகார சிந்தையும, ஆடம்பரமில்லாமல் அமைதியாயிருக்கும் ஸ்வபாவமும், ஆழ்ந்த யோசனையுடன் ராஜ்யதந்திரங்களை வெகு புத்திசாலித்தனமாயும் அழகாயும் நடத்துவதற்குத் தக்க ஸாமர்த்தியமும் நமமொவ்வொருவரின் மனதையும் கவருமென்பதில சந்தேகமேயில்லை. பொது ஜனங்களின் பாஷையையே பாஷையாகவும் பொதுஜனங்களின் மதத்தையே மதமாகவும் கொண்ட நம்மஹாராஜாவும் அவ்வம்சத்தின

ரும் பிரஜைகளுடன் ஒன்றுபட்டு அவர்களின் யோகக்ஷேமங்களை நெருங்கின பழக்கத்துடன் நடத்தி வருவதுபோல் அவ்விதமல்லாத மற்றெந்த மன்னர்களும் பிரஜைகளின் க்ஷேமத்தை இவ்வளவு நன்றாய் கவனித்து நடத்தமுடியா தென்பது திண்ணம். இக்குறையை நீக்குவதற்காகவே வெளிநாட்டில் ஜனங்கள் ஸ்வாதந்திரியத்தை அடைய முயலுகிறார்கள். நம்மஹாராஜாவின் அரசாட்சி சமயத்தில் ஜனங்களுக்கு நேர்ந்த குணங்களில் சிலவற்றைச் சுருக்கமாய் நான் இவ்விடத்தில் எடுத்துக் கூறுகிறேன்.

"वार्तोच्छेदे हि लोकोऽयं श्वसन्नपि न जीवति ।"

என்றபடி, நாட்டில் விவசாயம், வியாபாரம், கோரக்ஷை இம்மூன்றும் செழித்து வளராதவரை, பணம் பெருகி ஜனங்கள் சுகமாய் வாழவும், ஸர்காருக்குத் தீர்வையாகப் பணம் வந்து குவியவும் நியாயமிராது. விவசாய விஷயத்தில் ஜனங்களுக்கு மஹாராஜா செய்திருக்கும் பேருதவிக்குச் சில நிதர்சனங்களைப் பார்க்கலாம். மஹாராஜாவின் அரசாட்சிகாலத்தில் புதிதாய் வெட்டப்பட்ட கோதையாற்றுக்கால்வாயானது விவசாயத்திற்கு மிகுந்த விருத்தியைச் செய்திருக்கிறது. இச்சாசுவதமான தர்மத்தால் முன் நானூறு ஐந்நூறு ரூபாய்கூட விலைபெறாத நிலங்களெல்லாம் நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் என்று மதிக்கப் படுகின்றன. இவ்விதமாயின் கால்வாய் வெட்டப்படுவதற்கு முன் ஸ்வல்ப விலைக்கு நிலங்கள் வாங்கியிருக்கும் எவ்வளவு குடும்பங்கள் இப்பொழுது பெரிய தனிகர்களாயிருக்கவேண்டும். பண்டைக்காலத்து ராஜாக்களைப் போல் வீடு, நிலம் முதலியவை கொடுத்து வெகுகுடும்பங்களை பிரதிஷ்டிப்பது இந்நாள் அரசாட்சி முறையை அனுசரித்து சாத்தியமில்லையாயினும் நம் மஹாராஜா வெகு குடும்பங்களை நிலைநிறுத்தியதற்குத் துல்யமான புண்ணியத்தைப் பெற்றிருக்கிறார். கோதையாற்றுக் கால்வாயும் மஹாராஜாவின் பெயரும் கூடவே நீடூழி காலம் விளக்குமென்பதில் சந்தேகமில்லை. புதிதாய்க் கண்டு பிடிக்கப்படும விவசாயத்தின் நவீனமுறைகளை ஜனங்களுக்குப் போதிப்பிக்க விவசாய டிப்பார்ட்டுமெண்டை யேற்படுத்தி யிருப்பதும், நெல்லாகக் கொடுத்துவந்த கரத்தைப் பணமாக மாற்றியதும் விவசாயிகளுக்குச் செய்திருக்கும் மஹோபகாரங்களாகின்றன. இன்னும் கொஞ்ச நாளில் திறக்கப்படும். கொல்லம்-திருவனந்தபுரம் ரயில்வண்டிப் பாதையானது ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு மிகுந்த ஸௌகரியமானதால் இது வியாபாரிகளுக்கு மஹாராஜா செய்திருக்குமோர் பெரிய ஸகாயம். மஹாராஜாவின் பூர்வபுருஷர்களிலொருவர் போர்த்துகீஸ்வியாபாரிகள் முதல் முதல் மலையாளத்தில் வந்து தங்குவதற்கு சுமார் 675 வருஷங்கட்கு முன்னமேயே "ஸபீர்சோ" முதலிய கிருஸ்தவ வியாபாரிகளுக்கு கொல்லமென்னுமூரை இனாமளித்து மற்றுமுள்ள ஸௌகரியங்களையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். கொல்ல மாண்டென்று வழங்கிவரும் வருஷமானது இந்நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தவே வந்திருக்கவேண்டுமென்று சரித்திரவாராய்ச்சியில் கியாதிபெற்ற ம-ா-ா-ஸ்ரீ T. N. கோபிநாதராவ் அவர்கள் தகுந்த நியாயங்களுடன் நிரூபித்திருக்கிறார்கள்.

கீழ்நாட்டு வழக்கங்களிற் சிலது மேல்நாட்டு நாகரீகத்தின் நிர்ப்பந்தத்திற்கு முடிவணங்கி விலகியிருக்கவேண்டியிருநாளில், மஹாராஜா தமது ராஜதானியில் தொன்றுதொட்டு நடந்துவரும அன்னதானத்தை நடத்திவருவது பெரிதும் புகழவேண்டியவோர் தர்மசிரத்தையைக் காண்பிக்கிறது. இம்மாதிரி தர்மத்தை இந்தியாவின் எப்பாகத்திலும் காணமுடியாது. சேரநாட்டரசர்கள் மட்டுமே அன்னதானத்தில் பெயர் பெற்றிருப்பவர்கள். இவர்கள் செய்யும அன்னதானத்தின் மஹிமையைத் தமிழ்நூல்கள் பலவாறாகப் புகழ்கின்றன. பாரதயுத்தத்தில் கூட பாண்டவசைனியங்களுக்கு அன்னம்கொடுக்கும் பொறுப்பை "பெருஞ் சோற்று உதியன் சேரலாதன்" என்னும் சேரராஜனே ஏற்றுக்கொண்டதாகக் கூறியிருக்கிறது.

அன்னதானத்தால் சேரநாட்டரசர்களுக்கு வளர்ந்துவரும் கீர்த்தியை சகியாமல் சோழ சக்கரவர்த்தியான ராஜராஜனனவன் தென்குமரியிலிருந்த "ஸ்ரீவல்லபப்பெருஞ்சாலை" யென்னும் ஊணளிக்கும் சாலையின் பழைய பெயரைமாற்றித் தன்பெயரால் ராஜராஜப்பெருஞ்சாலை யென்று விவஹரிக்கும்படி செய்தான. அத்துடன் நிற்காமல், பண்டைக் காலத்தில் காந்தளூரென்று விவஹரிக்கப்பட்டு வந்த திருவனந்தபுரம் சாலைத்தெரு உள்ளிட்ட வட்டாரத்தில், முன்னளில் தென்னிந்தியா முழுவதும் பெயர் பெற்றிருந்த காந்தளூர்ச்சாலையை நடைபெறாமல் நிறுத்தவோ அல்லது தன பெயரால் நடத்தவோ செய்திருந்தான். இச்சாலைகளெல்லாமிந்நாள் Boarding house களின் நிலைமையில், கல்வி கற்கும் சட்டர்களுக்கு ஊண்முதலி

யவை அளித்து மற்றுமுதவிபுரிந்து வந்தனவென்று
தெரிகிறது. ஏனெனில் நம் மன்னனின் மூதாதைக
ளில் ஒருவராகிய 'ஸ்ரீவல்லபன்' அல்லது 'கருநந்த
டக்கன்' என்னும் முடிவேந்தர் (A. D. 855) காந்த
ளூர் மர்யாதையைப் பின்பற்றி தென்திருவிதாங்கூரி
லுள்ள பார்த்திவசேகரபுரத்தில் தொண்ணூற்றுஐந்து.
சட்டர்களுக்குச் சாலையொன்றை ஏற்படுத்தியதாக சா
ஸனத்தில் கூறியிருக்கிறது. தென் குமரியில் நடை
பெற்றுவந்த சாலையும் முன்கூறிய ராஜனால் ஸ்தாபிக்
கப்பட்டு அன்னோன் பெயரால் 'ஸ்ரீவல்லபப்பெருஞ்
சாலை' யென்று வியவஹரிக்கப்பட்டிருக்கவேண்டும்.
இதைத்தான் சோளசக்ரவர்த்தியான ராஜராஜன் (985)
ராஜராஜப் பெருஞ்சாலை யென்று மாற்றியது. இது
நிற்க; காந்தளூர்ச்சாலையை ராஜராஜன் நிறுத்தியதாகக்
கூறிக்கொண்டாலும் அவனெண்ணம கைகூடியதாகத்
தெரியவில்லை. சேரராஜாக்கள் அடிக்கடி இச்சாலைக்கு
நேரும் இடையூறுகளை அந்தந்தசமயங்களுக்குத்தக்க
படி விலக்கிக்கொண்டு பிடிவாதமாய் இச்சாலையை
நடத்தி வந்திருக்கிறார்கள். ராஜராஜனைப்போல் அவன்
பெயரானை "ராஜாதி ராஜனும்," (A. D. 1018) முத
லாவது குலோத்துங்கனும் கூட அஜீவர்களின் காலங்
களில் இச்சாலையை நிறுத்தியதாகச சொல்லிக் கொள்
ளுகிறார்கள். இவர்களைப் போலவே பராந்தகனென்
னும் பாண்டியராஜனும் நிறுத்தியதாகச்சொல்லிக்கொ
ள்ளுகிறான். முன் பிரஸ்தாபித்தவிஷயத்திலிருந்து நம்
நாட்டுமன்னர்களுக்கு அன்னதானத்திலுள்ள சிரத்தை
யும் அதன்னிமித்தம் அன்னோர்க்கு ஓங்கிவளரும் கீர்
த்தியில் சோளபாண்டியர்களுக்குள்ள அஸூயையும்
நன்றாய்விளங்கலாம். மேல்நாட்டு நாகரிகமானது கீழ்
நாட்டு வழக்கங்களுடன் பலமாய்ச்சண்டை செய்யும்
இந்நாளில் முன்னோரைப்போல் காரியங்கள் இலகுவாய்
நடந்துவருவது ஸாத்தியமில்லையாயினும் நம்மஹா
ராஜா பூர்வராஜாக்களைப் போலவே நாடோறும் பல்லா
யிரம் வேதியருக்கு சிரத்தையாய் அன்னமளித்து வரு
வதை ஒவ்வொரு ஹிந்துவும் பெருமைபாராட்டாமலி
ருக்கமுடியாது.

வித்தியா விஷயத்தில் நம்மஹாராஜா காட்டிவரும்
ஊக்கமும் அபிமானமும் யாவருமறிந்தவிஷயம். கீழ்த்
தரப்படிப்பை இலவசமாக்கியிருப்பதையும், தேசபா
ஷையை முன்னுக்குக் கொண்டுவரத்தக்க முயற்சிக
ளெடுத்து வருவதையும் பிரஜைகளெல்லாம் அடங்கா
மகிழ்ச்சியுடன் புகழ்ந்து வருகிறார்கள்.

ஹிந்துக்களின் பழமையான நாகரீகங்களும்
மும் மற்றுமுள்ள பெருமைகளும் வடமொழியி
லேயே அடங்கியிருக்கின்றன. இம்மொழியைக் கற்
றுக் கொள்வதற்காக ஸம்ஸ்கிருத கலாசாலையை ஸ்தா
பித்திருக்கிறார். ஒப்பற்ற திறமையுடன் மஹாபுத்தி
சாலிகளாய் விளங்கி நம பூர்விகர்கள் கண்டு பிடித்து
வந்த தத்வங்களெல்லாம் இன்றோ நாளையோ அழி ம்
படியான நிலைமையில் ஜீரணமான ஏடுகளில் புதைந்து
கிடக்கின்றன. இவை ஹிந்துசமுதாயத்திற்கே விலை
உயர்ந்த குடும்பச் சொத்தாகப் பாவிக்கப்படவேண்டி
யவை. இவ்வேடுகளை பாணங்கள் அரித்து பாழாக்கி
விடுவதற்குள் அவற்றைச்சேகரிக்கவும் அச்சிட்டுவெளி
யிடவும வித்வான்களை நியமித்திருப்பது நன்றியறிவு
டன் பெரிதும பாராட்டத்தக்கது. இம்மாதிரி நன்
மைகளிலிருந்து நம் மஹாராஜா ஸம்ஸ்கிருத பாஷை
யில் வைத்திருக்குமாதரவுமபிமானமும் வெளியாக
லாம். மஹாராஜாவின் மூதாதைகளில் பலர் வடமொ
ழியில் கரை கடந்தவர்கள். சுமார் 1375-ல் ஜீவித்தி
ருந்த ஆதித்தியவர்மனென்னும் அரசர் சிட்சை, வியா
கரணம் முதலிய ஸர்வாங்கங்களையும் கற்றுத்தேர்ந்து
ஸர்வாங்கநாதரென்று பெயர் பெற்றிருந்தார். "ரவி
வர்மன் ஸங்கிராமதீரன்" என்னும் மற்றொரு அரசர்
வடமொழியில் "ப்ரத்யும்நாப்யுதயம்" என்னும்
இனிமையான நாடகமொன்றை இயற்றியிருப்பது
டன் "தக்ஷிணபோஜன" என்று பட்டமும பெற்றி
ருந்தார். இவ்வரசர் இந்நாட்டிற்கு வெளியே தொ
ண்டைமண்டலத்தில் காஞ்சிபுரம்வரை படையெடுத்
துச்சென்றவர். இவரது சாஸனங்களிற் சில அவ்வி
டங்களிலும் காணப்படுகின்றன.

இங்ஙனம் தம் வம்சத்தில் ஜனித்த பூர்வராஜாக்
கள்படித்துப் பலவிதத்திலும் அபிமானித்து வந்த
வடமொழியை நம்மஹாராஜாவும் உசிதம்போல் ஆத
ரித்துவருவது முற்றிலும் பொருத்தமாயிருக்கிறது.
இந்தியாவில் இப்பொழுது பரவிவரும் கிரிஸ்துவ
மதத்தை ஸ்தாபித்த இயேசுகிரிஸ்து ஜனிப்பதற்கு
250 வருஷங்கட்கு முன்னமேயே புத்தமதத்தின் மே
லான கொள்கைகளை மேல்நாடுகளில் பரவச்செய்வ
தற்கு ஸிரியா, ஈஜிப்ட், ஈபிரஸ், மாஸெடோனியா,
ஸைரீன், இவ்வைந்து ராஜ்யங்களுக்கும் அசோக சக்
கிரவர்த்தி புத்த பிக்ஷுக்களை யனுப்பியிருந்தார்.
அசோக சக்கிரவர்த்தியைப்போலவே நம்மஹாராஜா
வும், திருவிதாங்கூரிலவதரித்து ஒப்பற்ற திறமையு

டன் நுட்பமான தத்வங்களைக் கண்டுபிடித்து வெளியிட்ட ஸ்ரீசங்கராசாரியாரின் அத்வைத மதத்தைத் தேசாந்தரங்களில் பரவச்செய்வதற்காக சிகாகோமுதலிய இடங்கட்கு ஸ்வாமி விவேகானந்தரையனுப்பி உதவியிருக்கிறார்.

முன்னுளிருந்த பஞ்சாயத்துமுறைகளை இன்னுளில நடைப்புக்குக் கொண்டுவந்திருப்பதும், தொழிலபிவிருத்திக்காகச் சிறுவர்களுக்குப் பணவுதவிசெய்து தேசாந்திரத்திற்கனுப்பி, அதைக்கற்றுவரச்செய்வதும் இன்னும் இமமாதிரி எத்தனையோ நன்மைகள் நம்ம ஹாராஜாவின் அரசாட்சி சமயத்தில் ஏற்பட்டிருக்கின்றன. எந்தராஜனின் அதிகாரத்திற்குள்ப்பட்ட பூமியில் காடுகளிலோ, காடுகளிலோ திருடர் பயமே கிடையாதோ அவ்வரசனே க்ஷேமகிருத்தான் ராஜனென்று ஆபஸ்தமப மஹாரிஷி கூறியிருக்கிறார், இம்மாதிரி க்ஷேமகிருத்தான ராஜனென்று சொல்லவேண்டுமானுல் நம்மஹாராஜனே.

இம்மஹாராஜன் நோயற்றவாழ்வுடன் இன்னும் பல்லாண்டு ஜனோபகார சிந்தையுடன் தமது ஸாமர்த்தியமான அரசாட்சியைச்செலுத்திவரவேண்டுமென்று ஸர்வேசுவரரான பத்மநாபரின் மலரடியில் சென்னி சாய்த்து வேண்டிக் கொள்ளுவோம்,

शरदां शतमपि जीयात्सकलकलापूर्णमण्डलो राजा ।
विबुधगणसेव्यमानः सद्वृत्तो मूलसम्भूतः ॥
यावद्धीरान्प्रसूते परहितनिरतान्पुण्यशीलान्धरित्री
यावद्धत्ते धरित्रीमुपचितविभवामुर्वरां पन्नगेन्द्रः ।
यावद्रा पन्नगेन्द्रे कलयति भगवान्योगनिद्रां मुकुन्द-
स्तावद्दीव्यान्मुकुन्दप्रणतिपरिणतश्रीरसौ चेरवंशः ॥

*மாட்சிமைதங்கிய மஹாராஜா அவர்களின்ஷஷ்டியப்தபூர்த்தி மகோத்சவத்தைசம்மந்தித்து 25-9-17ல் கரமனை மஹாஜனங்கள் நடத்திய ஸமாஜத்தில் டி. ஐ. வி. பிரஸிடெண்ட் மகா—ா—ா—ஸ்ரீ M. V. சுப்பிரமணியய்யர் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஆர்கியலாஜிகல் டிப்பார்ட்டுமெண்டு பண்டிதர் மிஸ்டர் வி. ஸ்ரீநிவாசசாஸ்திரி, ஸ்மிருதிவிசாரதர் செய்த உபந்நியாஸம்.

கடவுளுடைய நாமங்களை மனிதர்களுக்கிடுவது ஏன்?

ஸ்ரீமான் R. சுப்பிரமணியய்யரவர்கள்.

மானிடராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் கடவுளின் ஞாபகத்தில் ஈடுபட்டு அன்னுரை *எந்நாளும் மறவாது நம்மாலியன்ற அளவு அவரது நாமங்களை பஜனம் பண்ணும்பொருட்டும் அவருக்கும் நமக்கும் உறுதியான பந்தம் உண்டாகும் பொருட்டும் அவரது அனந்த கல்யாண குணங்களைக் குறிக்கும் திருநாமங்களை யேற்படுத்தி அந்நாமங்களை ஒவ்வொரு மனிதனும் அணியவேண்டுமென்றும், அவைகளால் ஒருவரை யொருவர் அழைக்கும் போதெல்லாம் கடவுளின் ஞாபகம் உண்டாகி அவருடைய நினைவென்னும் நித்தியானந்தத்தில் மூழ்கி நனைவுற்று நறுமணம் பெற்று அவரது தியானமாகிய வேணுகானத்தில் ஈடுபட்டு அவர் பாதமாகிய பத்ம தளங்களைத் தொட்டு இப்பாரினில் பரமஸாட்குண்ணியம் பெற்று விளங்கவேண்டுமென்றும் நம் தேசத்துப பூர்வீக மகரிஷிகள் மகா அர்த்த புஷ்டியுள்ளதாயும் திவ்யகுண பரிபூரண தேஜோ ரூபமாயுமுள்ள திவ்ய நாமங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் நாம் நம்முடைய தோழர்கள் சகோதர சகோதரிகள் இன்னும் மற்றவர்களைப் பெயரிட்டழைக்கும் போதெல்லாம் சோமு, சீமாசு, கோபு, கிட்டு, காமு, மீனு என்ற அரைப் பெயர்களாலும், கொச்சைச் சொற்களாலும் நாமங்களைப் பின்னப்படுத்தி அழைக்காமல் சோமசுந்தரம், ஸ்ரீநிவாஸன் கோபாலன், கிருஷ்ணமூர்த்தி, காமாக்ஷி, மீனாக்ஷி என்ற திவ்ய நாமங்களால் அழைக்க வேண்டியது அத்யாவசியம். நாமங்களைச் சுருக்கி அழைப்பதால் அந்நாமங்களின் ஸ்வபாவ சக்தி குறைந்து விபரீத அர்த்தங்கள் உண்டாகி அவைகளால் மிகக் கஷ்டமுண்டாகும். தவிர சில நாமங்களுக்கு நேர்விரோதமான அர்த்தங்கள் உண்டாகின்றன. உதாரணமாக நானிருக்கும் ஊரில் "மாசிலாமணி முதலியார்" என்றொருவரிருக்கிறார். அவரை சாதாரணமாய் ஜனங்கள் "மாசு முதலியார்" என்ற சுருக்கப் பெயராலேயே அழைக்கின்றனர். அந்தோ! என்னே பாருங்கள்! அவரது தாய்தந்தையர் அவருக்கு "மாசிலாமணி" என்ற திவ்ய நாமத்தை யிட்டிருக்க இப்பொழும் ஜனங்கள் அவரை மாசுடைய மணியாய்த் திருப்பி விட்டன

ரன்றோ? இவ்வாறு தான் நாமங்களின் எழுத்துக்களைக் குறைப்பதால் விபரீத அர்த்தங்கள் உண்டாவதோடு பிறாது மனஸ்தாபங்களும் நம்பால் வந்து தலைப்படுகின்றன. ஆகையல் பாரத மக்களாய்ப் பிறந்து, இப்பாரத பூமியிலேயே வளர்ந்து பாரதமாதாவின் கரங்களிலேயே தவழ்ந்து விளையாடும் பாரத மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் பகவத் கல்யாண குணங்களைக் குறிக்கும் திருநாமங்களைப் பின்னப்படுத்தாமலும், உள்ளன்போடும் ஒரு தரமேனும் உரைப்போமாகில் நாம் பகவத் கருணை கடாட்சத்திற்குப் பாத்திரமாவோமென்பது திண்ணம்.

கலாசிந்தாமணி

நவநீதி.

உண்ணுதற்கு வாயும் உடுப்பதற்கு நல்லுடலும்
எண்ணுதற்கு மானமு மிங்கில்லாக்கால்-ஒண்ணுதலாய்
போதும் படிப்புப்பொருள் வேண்டா மென்று சிலர்
ஓதும் விதியுண்மை யோர்.

கா கா கா என்று கத்துங்காகமே யுன்னையன்றோ
வா வா வா வென்றழைத்து மானிப்பார்—ஆ ஆ ஆ
கள்ளனேயெனுங் கருந்தொளியா னுமாயின்
வெள்ளனென வையமென்னுமே.

கைநழுவிப் போகும் கவலைபிணி சாவுகரும்
பைவிறைபாதென் றும்பா மூகுமே—ஐலைத்துப்
புத்திவிளக்கித் தினமும் புத்தறிவூட் டும்புனிதப்
பத்திரிகைக் கீயாப் பணம்.

மாளிகையும் வாகனமும் மன்னரிடம் சேவகமும்
நீளுலகில் ஓர்மதிப்பும் சேர்ந்தக்கால்—வாளயிலைத்
தோற்கடிக்குங் கண்ணுப்! இத்தொல்லுலகே யன்ன
காற் படிப்பும் மேற்படிப்பாம் காண். [வாதம்

புதுக்காளமேகம்

உத்தராம சரிதம்.

அங்கம் 2.

[58—வது பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீமாந். C. N. அனந்தராமய்ய சாஸ்திரியவர்கள் M A.

ஸ்ரீரா;—ஹா! கஷ்டம்! யான் மிக வெறுக்கத்தக்க காரியம் இயற்றும் கொடியனே! இளமை தொட்டிது காறும் பேணிவளர்த்தலான் அன்பு மிக்கு மனமொன்றிய காதலியை மனைக் கண் வளர்க்கும் பசுங் கிளியை வேடனுக்குக் கொடுத்தாற் போல் சூதால் கூற்றுவனுக்குக் கொடுக்கிறேன். அதனாலே தொடத் தகுதியற்ற பெரும்பாவியான், அவள் தூய்மை கெடுப்பதேன்—— (சீதையின் தலையை மெல்லத் தூக்கித் தன் கையை யுருவி). வினையாற்கெட்ட கொடும்பாவி யென்போற் கிடைப்பரிது; ஹா தனிபேதாய்! என்னை நீ கைவிடு. நேரிழையே! சந்தன மரமென நம்பி நீ யோர் எட்டிமரத்தைக் கொண்டனையே (எழுந்து நின்று) கொடிது! கொடிது! உயிர்த் தோற்றமவாய்ந்துள இவ்வுலகனைத்தும் எனக்கெதிர் ஆயிற்று. இராமன் உயிரோடு உலாவியதன் பயன் இன்றோடன்றுயிற்று. இப்பொழுது நாடு பாழ் பெற்ற காடாயிற்று. இவ் வாழ்வும் பயனில் வாழ்வாயிற்று. உடலும் துன்பத் திடலாயிற்று. கதியிழந்தேன். யாது செய்வேன். வழியறிகிலேன்.

இராமன் அறிவற்றதனாலுப பயனென் கொல். துன்பத்திற்கு வசமாய் உழலவேண்டியோ? மென்மை சேர் அகத்துறுப்பு அனைத்தையும் துளைத்திடும் என்னுவி உட்சென்று குடையும் வச்சிரத்தாரையதோராணி யொக்கும். தாயே அருந்ததி! ஹா வசிஷ்டமாமுனியே! கௌசிய குருவே! அங்கியங் கடவுளே! பூமிதேவி! தந்தை சனகா! ஈன்றெடுத்த பெரியோரே. ஹா! அன்புசால் அரச சுக்கிரீவா! குணப்பெருங் குன்று மநுமானே! பெரும் பேருதவி

புரிந்த என் விடனே! மருவில் சீர் திரிசடையே! ஹா தும்மையெல்லாம் கொடியருட் கொடியனுமிவ்விராமன் இழித்துப் பழித்தனன். அஃதன்றெனின்-அவர் தம்மையெல்லாம் விளிக்க நான் யார்? அவர்களோ நற்குணம் நிரம்பிய பெரியோர்கள். குரூரனும நன்றி கெட்டவனுமான யான் அவர்களைப் பேர்கொண்டு விளிக்கின் பெரும்பாவம் அவர்களையும் சூழும்- எனெனில கனவிற் கொண்ட பயத்தாலிளகிய நிறை காப் பிணியாய்ப் பூர்ண நம்பிக்கையுடன் மார்மீது சாய்ந்து உறங்குகின்ற மனைக்கோர் திருவாய என்னுருயிர்க் காதலியைக் கை நீத்து கடும்புலிகட்கு இரையாய்க் களைந்து இடலானேன். (ஸீதையின் அடிகளைத் தன் முடிமேல் வைத்து) இராமனது தலைக்கும் உனது திருவடித்தாமரைகட்கும் கடைக்காலத்து நேரும் சம்பந்தத் தொடர்ச்சி இதுவே. (என்று கதறுதல்)

(அணியறையில்)

அந்தணர் வாழ்வு சிதைந்து விட்டது! சிதைந்துவிட்டது!!

ஸ்ரீரா:—யார் அங்கே? இதென்ன வென்று விசாரிக்கவேண்டும்.

(பின்னும் அணியறையில்)

கடுந்தவம் புரிந்து யமுனைக் கரைக்கண் காலங்கழிக்கும் முனிக் குலத்தோர் லவணசுரன் இழைக்குந்துன்பத்தான் காத்தலைக் கைக்கொண்ட உம்மை சரணடைகின்றார்கள்.

ஸ்ரீராம:—ஹா! இப்பொழுதும் அரக்கா வன் கொடுமையா? ஆயின் கும்பி நசியின் மகனை அக்கொடியனை வேரறுக்க சத்ருக்னனை அனுப்புகின்றேன். (இங்ஙனம் அடி முன் சென்று திரும்பி) அந்தோ! தேவி! இந்த நிலைமையிலா நீ போகிறாய்? பகவதி பூதேவி! சனக வம்சத்துக்கும் ரகு வம்சத்துக்கும் மங்களத் திரளாய மாசற்ற இவளை தூய்மைமயமானயாகச் சாலையில் நீவிர் பெற்றெடுத்தீரோ. அத்தகைச் சிறப்பற்று ஓங்கிய உம்மகளை நீவிரே காக்கக்கடவீர்.

(இவ்வாறு கூறி அழுதவாறே மறைதல்)

ஸீதை:—ஹா? சௌமித்ரோய்! உத்தமா! தாங்கள் எங்கு இருக்கிறீர்கள். ஹா; கஷ்டம் கஷ்டம்!' கெட்ட கனவாலாய பயத்தால் ஏமாந்து உத்தமரைப் பிரிந்ததுபோலெண்ணி அவரை விளித்தேனே (நாலு பக்கமும் உற்று நோக்கி) கஷ்டம் கஷ்டம்!! கண்ணயர்ந்து தூங்கிய என்னைக் கைநீத்து நாதர் எங்கு சென்றார்? இருக்கட்டும், இனி நான் அவரைக் காணும் பொழுது என்னுயிர் என் வசப் பட்டிருப்பின் நான் அவர் மாட்டுக் கோபங் கொள்வேன்.

காவலாளிகள் யார் இங்கே?

துர்:—[புகுந்து] தேவி! இளையர் இலக்குமணர் தெரிவிக்கிறார். "தேர் ஆயத்தமாயிருக்கிறது; தேவி தேர்மீது ஏறலாம்" என

ஸீதை:—இதோ ஏறுகிறேன். [எழுந்து நின்று] என் சூல் அசைகின்றதே, மெல்லச் செல்கின்றேன்.

துர்:—தேவி! இங்கே—இப்படி—

ஸீதை:—ரகுகுல தெய்வங்கட்கு சரணங்களே,

[எல்லோரும் மறைதல்]

முதலங்கம் முடியும்.

C. N. A. Ramaiya Sastri.